T. 3184

24 JUN 1964
MADRAS
3184

சுவாமி விவேகானந்தரும் அமெரிக்காவும்

சுவாமி விவேகானந்தரும் அமெரிக்காவும்

பொருளடக்கம்

வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்	3
உலக சமயப் பேரவையில் விவேகானந்தர்	5
விவேகானந்தர் காலத்தில் அமெரிக்க அறிவுலக நிலை	11
அமெரிக்காவில் விவேகானந்தரின் தொண்டுகள்	15
விவேகானந்தர் கண்ட அமெரிக்கா	22
விவேகானந்தருக்கு அமெரிக்காவின் புகழ்மாலை	27

சுவாமி விவேகானந்தரும் அமெரிக்காவும் :

வாசகம் : பேராசிரியர் அமிய குமார் மஜும்தார், ஃபிரடு டபிள்யூ. டிரம்போர்

ஆசிரியர் : அம்பிகா குப்தா

துணையாசியர் : ஜகன்னாத் சர்மா

ஓவியம் : இந்து பி. முகர்ஜி, காந்தி ராய்

தயாரிப்பு : டக்ளஸ் ஏ. ஃபெரிஸ்

புகைப்படங்கள் : கல்கத்தா, அத்வைத ஆஸ்ரமம்; அமெரிக்காவில் சான்பிரான்ஸிஸ்கோ நகரிலுள்ள வட கலிஃபோர்னியா வேதாந்த சங்கம்.

T.3184

முன்னுரை

ஒரு காலத்தில் ஒன்றையொன்று அதிகம் அறிந்திராத நாடுகள் இன்று விரைவாக நட்புறவு களை வளர்த்து வருகின்றன; இது இக்காலத்தின் ஒரு சிறப்பு. இந்திய நாடு விடுதலை பெற்றுப் பதினைந்து ஆண்டுகளில் இந்திய, அமெரிக்க அரசாங்கங்கள் பலவேறு புதிய பிணைப்புகளை இடைவிடாமல் வளர்த்து வந்துள்ளன. விவேகானந்தர் காலத்தில் — சுமார் அறுபதாண்டு களுக்கு முன்னர் — யாரோ வெகு சிலர்தாம் இரு நாடுகளுக்குமிடையே சென்று வந்தனர். ஆனால் இன்றோ ஆயிரக்கணக்கானவர்கள் இரு நாடுகளிலும் விருந்தாளிகளாக இருந்து வரு கின்றனர். இந்திய வாழ்க்கை பற்றி அமெரிக்கர் கொண்டிருந்த கருத்துகளுக்கு மேலும் நேரடியான ஆக்கமளித்தன, சென்ற நூற்றாண்டின் இறுதியில் சுவாமி விவேகானந்தர் மேற்கொண்ட அமெரிக்க சுற்றுப் பிரயாணங்கள். முற்றிலும் நூல்களின் வாயிலாகவே அவர்கள் அறிந்திருந்தவை யனைத்தும் வரலாற்றிலேயே ஆற்றல் படைத்த பெருமக்களில் ஒருவரை நேரில் கண்டதால் மேலும் வலுப்பெற்றன. ஆன்மீக நெறி நிற்கும் இந்தியர் ஒருவருக்கு ஒரு இலக் கணமாக அவர் ஆயிரமாயிரம் அமெரிக்கரின் உள்ளங்களில் நிலை பெற்றார். தங்கள் நாட்டு மண்ணிலேயே அடி வைக்காத மற்றொரு இந்தியத் தலைவர் — அண்ணல் காந்தியடிகளை அமெரிக்க மக்கள் புரிந்து கொண்டு போற்றுவதற்கு, சுவாமி விவேகானந்தர் முன்னோடியாக அங்கு சென்று, விட்டுவந்த நீங்காத நினைவுகளே உண்மையில் காரணம் என்று சொல்லலாம். வேதாந்த தத்துவ ஆராய்ச்சிக்கு அமெரிக்காவில் முதன் முதலில் வித்திட்டு ஊக்கமூட்டியவர், விவேகானந்தர்தாம். இந்த ஊக்கம் தான் இந்தியாவின் இதர பொது விவகாரங்களை அறிய அந்நாட்டில் ஆர்வத்தைப் பரப்பியது. விவேகானந்தர் நேரில் சென்று அமெரிக்காவில் நிறுவி வந்த அடிப்படைகளின் மீது பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவுப் பாலங்கள் பல தோன்றின. அவை இந்தியாவின் விடுதலைப் போரில் அமெரிக்கர்கள் நேரடி அக்கறை கொள்ளுமாறு செய்து, இன்று, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாப் பெருந் துணையாக அமெரிக்கா விளங்க வழி கோலின. அவர் பிறந்து ஒரு நூற்றாண்டாகும் இன்று, 1963-ல், பார்க்கையில் இந்திய - அமெரிக்க உறவுகள் என்னும் வரலாற்றின் அடி வானில் சுவாமிஜியின் ஆற்றல் மிக்க தோற்றம் ஒரு விடி வெள்ளியாக விளங்குகிறது. இரு பெரும் நாடுகளின் மக்கள் நேருக்கு நேர் உறவு கொள்ளும் முக்கிய கட்டத்துக்கு சுவாமிஜியின் முயற்சிகள் வித்திட்டன; இன்று இவ்விரு நாடுகளின் சிறப்பான வளர்ச்சியை நாம் காண்கிறோம்.

வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

சுவாமி விவேகானந்தர் என்று பின்னர் புகழ்பெற்ற பெருமகன், நரேந்திரநாத் தத்தர் என்னும் பெயருடன் *1863*-ல் பிறந்தவர். அவரைப் பெற்றெடுத்த கல்கத்தா நகரம் அன்று மறுமலர்ச்சி என்றே பெரும்பாலும் குறிப்பிடப்பட்ட ஒரு அறிவு மலர்ச்சிக்கு நிலைக்களனாக விளங்கியது. எனவே, பத்தொன்பதாவது நூற்றாண்டு இந்தியாவுக்கு வழிகாட்டும் மாநிலம் என்ற சிறப்பு வங்காளத்துக்குக் கிடைத்திருந்தது.

விறுவிறுப்பு மிக்க ஒரு மேடையில் நடிகர் ஒருவர் எவ்வாறு அடி எடுத்து வைப்பாரோ, அது போலவே இளைஞர் நரேந்திரநாத் உரிய வயது வந்ததும் கல்கத்தாவில் வாழ்க்கை தொடங்கினார். ஆட்சியாளரான அந்நியரின் வாழ்க்கை முறைகளுக்கு நெடுங்காலமாக ஆளாகியிருந்த இந்திய நாட்டின் பண்டைப் பெரும் பண்பாடு, மேலை நாட்டுக் கருத்துக்களை ஏற்று விரைவாக மாறிக் கொண்டிருந்தது. வங்காள அரசாங்க நிறுவனங்களிலும், கல்வி நிலையங்களிலும் பணியாற்றிவந்த பலர் புதிய மறுமலர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். எழுத்தாளர்களும் புதிய வேகத்தில் மூழ்கி ஓங்கி வளர்ந்து வந்தனர்; ஒரு புதிய ஒற்றுமை காண்பதில் முனைந்திருந்தனர், எனவே, *1880*-ல் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் சட்டப் படிப்புப் பயில நரேந்திரநாதர் சேர்ந்தபோது, சமுதாயத்தில் பலப்பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன. நாட்டின் முன்பு எதிர்ப்பட்ட பலவேறு சிக்கல்களுக்குத் தீர்வு காணத் துடித்த எண்ணிறந்த இளைஞர்களில் அவரும் ஒருவரானார். சமுதாயத்தின் தேவைகள் பலவாறாக இருந்தன; அவற்றை ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளில் தீர்க்க முற்பட்டனர்.

இளமையிலேயே நரேந்திரரிடம் ஆழ்ந்த அறிவாற்றல் விளங்கியது; அதோடு இசையில் பற்றுடையவர்; விளையாட்டுக்களில் திறனுடையவர். நூல்கள் படிப்பதில் ஒரு புலி; படித்ததை நினைவில் வைத்துக் கொள்வதில் அவர் ஒரு சிங்கம். தாயிடம் குழந்தைப் பருவத்தில் கேட்ட கதைகளினால் ஆர்வம் தூண்டப்பெற்று, இந்து சமய நூல்களை ஆழமாகக் கற்றுப் புலமை பெற்றார். 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்னும் ஆங்கிலக் கலைக் களஞ்சியம் கிட்டத்தட்ட அவருக்குத் தலைகீழ்ப் பாடம். இன்று ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரி என்று பெயர் பெற்றுள்ள பழைய ஜெனரல் அசெம்பிளி கழகத்தின் முதல்வரும் நரேந்திரரின் ஆசிரியருமான ரெவரண்ட் டபிள்யூ. டபிள்யூ. ஹேஸ்ட்டி, "நரேந்திரநாத் மெய்யாகவே ஒரு மேதை; அவன் உயர்நிலை எய்துவது உறுதி" என்று ஒரு சமயம் கூறி மகிழ்ந்தாராம்; இந்தக் கழகத்தில்தான் நரேந்திரர் ஐரோப்பியத் தத்துவக் கலை பயின்றார். கவிஞர் வர்ட்ஸ்வொர்த் பெற்ற ஆன்மீக அனுபவங்களை முதல்வர் ஹேஸ்ட்டி விளக்குகையில்தான் முதன் முதலாக அவரிடமிருந்து புகழ்பெற்ற ஆன்மீகத் தலைவர் மகரிஷி ராமகிருஷ்ணர் பற்றி நரேந்திரர் அறியலானார்.

1881, நரேந்திரரின் வாழ்வில் சிறப்புமிக்க ஓர் ஆண்டாகும்; அப்போதுதான் அவர் ராமகிருஷ்ண முனிவரை முதன் முறையாகச் சந்தித்தார். அது முதல் மெய்ஞ்ஞானம் பெறப் பேரார்வம் மிக்கவராய் ராமகிருஷ்ண முனிவரின் மணி மொழிகளில் கருத்தூன்றலானார். விவேகானந்தரின் மெய்ஞான ஆர்வம் தணியாமல் வளர்ந்து கொண்டே போயிற்று.

அடுத்து ராமகிருஷ்ணரும் - நரேந்திரரும் குருவும் - சீடருமாக ஐந்தாறு ஆண்டுகள் ஒன்றி வாழ்ந்தனர். அறிவிற் சிறந்த நரேந்திரர் இக்காலத்தில் ஆன்மீகத் துறையிலும் வளர்ந்தோங்கிப் புடம் போட்ட பொன்னானார். அறிவுடன் மெய்யறிவு கூடிற்று; அது ஆழ்ந்து, அகன்று, விவேகம் வந்தெய்தியது. இளைஞர் நரேந்திரர் விவேகானந்தர் ஆனார். செயல் ஆர்வத்திற்கு தியானம் என்னும் தவம் ஆக்கமும் ஊக்கமும் வழங்குமெனக் கண்டார்.

1886-ல் ராமகிருஷ்ணர் மறைந்தார். அவருடைய சீடர்களையெல்லாம் விவேகானந்தர் ஒன்று திரட்டி, சமயத் தொண்டர்கள் இயக்கம் ஒன்று கண்டார்: "ராமகிருஷ்ண மிஷன்" என்று பெயரிட்டார். பேலூரில் தலைமை மடாலயத்தை அமைத்தார். இடையில் தம் வாழ்க்கையின் தலையாய பணியில் முனைந்தார்; கீழ்த்திசையின் ஆன்மீகச் செல்வத்துடன் மேல் திசையின்

அறிவுச் செல்வத்தை வெற்றியுடன் இணைத்துத் தாம் கண்ட இன்பத்தை உலக மக்கள் அனைவரும் பெறுமாறு செய்தல் பொருட்டு, தலைமை தாங்கி வழிநடத்தும் ஊக்கத்தோடு தொண்டாற்றத் தலைப்பட்டார்.

சிறு வயதில் கஷ்ட நஷ்டங்களை நேரில் அனுபவித்தவர், விவேகானந்தர். இந்திய நாடு நெடுகிலும் அவர் அலைந்து திரிகையில், நாட்டின் கோடிக்கணக்கான ஏழை மக்களின் துயர் கண்டு அவரது மனம் வேதனைப்பட்டது. ஒளி பெற்ற மனமல்லவா, அவர் பெற்றிருந்தது? மக்கள் குலத்துக்குப் பணி செய்ய வேண்டுமென்னும் அவரது நோக்கமும், பிறருக்கு வழிகாட்டும் அவரது தேசியக் கருத்துக்களும் அவர் வாழ்ந்து பெற்ற அனுபவத்தினின்றும் பிறந்தவை.

விவேகானந்தர் செய்த சுற்றுப் பிரயாணங்கள் அவர் வாழ்வில் புகழ்பெற்று விளங்குபவை. ஓய்வு ஒழிச்சல் இல்லாத தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் பதினைந்தாண்டுகள் இடையறாமல் அவர் ஆற்றிவந்த சொற்பொழிவுகள் மூலம் ஒற்றுமை, பொறுமை என்னும் பொது நெறியை நேரில் பரப்பி வந்தார். ஏறு போன்ற அவரது தோற்றமும், சிறந்த சொல் வன்மையும் யாரையும் எளிதில் ஆட்கொண்டன. இந்திய நாட்டின் நாலா திசைகளிலும் மட்டுமல்லாமல் கிழக்காசியா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களிலும் அவர் விரிவாகச் சுற்றுப் பிரயாணம் செய்தார். அமெரிக்காவில் சிக்காகோ நகரிலும், இமாலயத்தில் எட்டாத் தொலைவில் இருந்த அவருடைய ஆசிரமத்திலும் அவர் போதனைகள் நிகழ்த்தினார். 1893-ல் சிக்காகோவில் நடைபெற்ற உலக சமயப் பேரவையில்தான் விவேகானந்தர் தமது புலமையால் உலகறியும் ஒருவரானார். அவரது முயற்சிகளால் மேல் நாடுகளில் பல வேதாந்த சங்கங்கள் தோன்றின; அவற்றில் முதலில் தோன்றியது நியூயார்க் நகரில் 1894-ல் அவரே நிறுவியது.

விவேகானந்தர் தம்முடைய இறுதிக் காலம் வரையில் மக்கள் குலத்தின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். ஆன்மீக வாழ்வில் மட்டுமல்லாமல் சமூக வாழ்விலும் மக்களிடையே ஒருமை விளங்கவேண்டும்; அதுவே உண்மையான சகோதரத்துவம் என்று தெளிவாக உணர்ந்த அவர், அதை நிலை நிறுத்த ஓயாது உழைத்தார். இவ்வாறு தன்னலங் கருதாது பாடுபட்ட விவேகானந்தர், 1902-ல் தமது முப்பத்தொன்பதாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். உலகமெல்லாம் நடைபெறும் அவருடைய நூற்றாண்டு விழா அப்பெருமகனை நினைத்துப் போற்ற வழி வகுக்கும் விழா மட்டுமல்ல; அவர் தோற்றுவித்து இன்றும் நிலைத்து வாழும் நிலையங்களையும் நினைத்துப் போற்ற வழிசெய்யும் விழாவாகவும் அமையும்.



உலக சமயப் பேரவையில் விவேகானந்தர்

1893-ல் சிக்காகோ நகரில் உலக சமயப் பேரவை நடைபெற்றது. பேரவையோடு கூடவே, அங்கே மாபெரும் தொழில் விழா—உலகக் கொலம்பியா கண்காட்சி—ஒன்றும் நடந்தது. சிக்காகோ நகரம் அமெரிக்க நாட்டின் தானியக் களஞ்சியமாகவும், கால்நடை விற்பனை இடமாக வும் முக்கிய ரயில் பாதைகள் நிலையமாகவும் இருந்தது. இவையெல்லாம் நாட்டின் மேற்குப் பாகத்தில் குடியேறிய மக்கள், பொருளாதார வளமையைப் பெருக்கிக் கொள்வதற்குத் துணை செய்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்காலத்தில் மக்கள் அதிகமாக வெளி நாடுகளிலிருந்து வந்து குடியேறி, மக்கள் தொகையைப் பெருக்கி வந்தனர். எனவே, 1893-ல் அமெரிக்கா பலதரப்பட்ட கருத்துகள் கொண்ட பலவேறு நாட்டு மக்கள் சேர்ந்து வாழும் ஒரு நாடாக விளங்கியது.

விவேகானந்தர் 'வான்கூவர்' நகரில் இறங்கிப் புது உலகமான அமெரிக்காவில் அடி எடுத்துவைத்தார். அங்கிருந்து இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சிக்காகோ நகருக்கு சமயப் பேரவை ஆரம்பமாவதற்கு ஒரு மாதம் முன்னதாகவே போய்ச் சேர்ந்தார். யாரும் அறியாத இந்த இந்திய விருந்தாளி மேற்சொன்ன ஒரு மாதக் காலத்தில் புதிய நாட்டின் திகைப் பூட்டும் பழக்க வழக்கங்களை அறிந்து கொண்டார்; சந்தித்தவர்களையெல்லாம் நண்பர்களாக்கிக் கொண்டார்; அவர்கள் விரைவில் அவரது ஆதரவாளர்களாக மாறி விட்டனர்.

திருமதி ஜியார்ஜ் டபிள்யூ. ஹேல்

ஆரம்பத்தில் விவேகானந்தருக்கு அமெரிக்காவில் ஆதரவு கிடைக்கக் காரணமாக இருந்த குடும்பங்கள் இரண்டு. ஒன்று, மாஸச்சூஸட்ஸ் மாநிலத்தில் வாழ்ந்த எஃப். பி. ஸான் பார்ன் குடும்பம்; மற்றொன்று, சிக்காகோ நகரில் வாழ்ந்த ஜியார்ஜ் டபிள்யூ. ஹேல் தம்பதிகள் குடும்பம். முதன் முதலாக அவரைப் பார்த்தவர்கள், காந்தம் போன்று கவர்ந்திழுக்கும் அவரது கம்பீரமான தோற்றத்திலும் பண்புகளிலும் மயங்கிப் போய் விட்டனர்; இது அமெரிக்காவில் அவர் தம் பணியை நிறைவேற்றி வைக்க ஆயத்தம் செய்வதில் அவருக்குப் பெரிதும் உதவியது. தடையின்றிக் கிடைத்த ஒத்தாசை, விவேகானந்தரின் ஆரம்பக் காலப் பண முடைகளைத் தீர்த்து வைத்ததுடன் (முன்பின் அறியாத ஒரு நாட்டுக்குப் புதிதாக வந்துள்ள ஒருவரை பணமுடை வாட்டுவது இயல்பே) அவர் தமது தலையாய நோக்கத்தை நிறைவேற்றவும் துணை செய்தது. ஸான் பார்ன்ஸ் குடும்பத்தார் உதவியுடன் விவேகானந்தரைக் கண்டு பேசிய ஹார்வர்டு பேராசிரியர் ஜே. எச். ரைட் என்பவர், சமயப் பேரவைக்கு ஏற்பாடு செய்த முக்கியஸ்தர்களில் ஒருவருக்கு எழுதுகையில், "நம் நாட்டுப் பேராசிரியர்கள் அனைவருடைய அறிவாற்றலையும் ஒன்று சேர்த்தாலும் அது இவரது பேரறிவுக்கு இணையாகாது" என்று குறிப்பிட்டார்.

1893 செப்டம்பர் *11*-ந் தேதி சிக்காகோ நகரில் உலக சமயப் பேரவை தொடங்கியது. ஆன்மீக ஒற்றுமைக்காக மக்கள் குலம் நெடுங்காலமாகச் செய்து வந்த முயற்சியில் இது ஒரு குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி. சமயக் கண்ணோட்டத்தில் "வேற்றுமையில் ஒற்றுமை", "ஒற்றுமையில் வேற்றுமை" காணும் உறவைப் பேரவை வலியுறுத்தி, கிழக்கு—மேற்கு உலகங்கள் பண்பாட்டுத் துறையில் பரஸ்பரம் தோழமையும் பரிவும் கொள்வதன் அவசியத்தை விளக்கியது. பேரவையின் இலட்சியங்கள் சுருக்கமாகப் பின்வருமாறு அறிவிக்கப்பட்டன :—

1. உலக வரலாற்றில் முக்கியம் பெற்றுள்ள சமயங்களின் முக்கிய பிரதிநிதிகளை முதன் முதலாக ஒரு மகாநாட்டில் ஒன்றுகூட்டுவது.

2. பல்வேறு சமயங்களும் பொதுவாக என்னென்ன உண்மைகளைக் கூறுகின்றன?; அவற்றில் காணும் ஒற்றுமைகள் யாவை? என்பனவற்றைத் தக்க வழியில் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுவது.

3. ஒவ்வொரு சமயமும் பெற்றுள்ள முக்கியமான தனித்தனி உண்மைகள் எவை? கிறிஸ்தவ மதத்தின் பலவேறு பிரிவுகளும் போதிக்கும் உண்மைகள் யாவை-என்று தக்கோரைக் கொண்டு விளக்குவது.

4. சமயங்களிலுள்ள போலிக் கருத்துக்களை ஆராய்வது.

5. அக் காலத்தின் பெரும் சிக்கல்கள்—குறிப்பாக மிதக் குடி, தொழிலாளர் நிலை, கல்வி, செல்வம், வறுமை ஆகியன—தீர சமயம் எவ்வாறு வழிகாட்ட முடியும் என்று கண்டறிவது.

6. நிலையான உலக சமாதானம் காணும் நம்பிக்கையுடன் உலக நாடுகளிடையே நெருக்கமான தோழமை ஏற்படுவது.

பேரவையில் முதல் நாள் பிற்பகல் கூட்டத்தில் சுவாமி விவேகானந்தர் பேசினார். இன்று புகழ்பெற்றுவிட்ட "அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே" என்ற முகமனுடன் அவர் பேசத் தொடங்கியதும் வந்திருந்த அனைவரும் நெடுநேரம் கை தட்டி, முன்பு கண்டிராத பெரிய உற்சாகத்துடன் அவரது பேச்சுக்கு ஆதரவு காட்டினர். "சகோதர, சகோதரிகளே" என்ற சொற்களுக்காக அல்ல—ஏனெனில் அவருக்கு முன்பு பேசிய பலரும் உலக மக்கள் அனைவரும் சகோதரர்களே என்று கூறவே செய்தனர்—ஆனால் விவேகானந்தரின் வார்த்தைகள் பசப்பு மொழிகளல்ல; மக்கள் குலத்தின் ஆன்மீக ஒருமைப்பாட்டை உள்ளபடியே உணர்ந்து, உள்ளத்தின் அடித் தளத்திலிருந்து மலர்ந்த உண்மை வார்த்தைகள்—என்பதால்தான்.

சுவாமியின் சொற்பொழிவை நேரில் கேட்ட கவிஞர் மிஸ் ஹாரியட் மன்ரோ அம்மையார் தமது உணர்ச்சிகளைப் பின்வருமாறு எழுத்தில் வடித்து வைத்துள்ளார்:

"கடைசியாகப் பேசிய மகான் சுவாமி விவேகானந்தர் அனைவரையும் வென்று, நகரையே தமதாக்கிக் கொண்டுவிட்டார்... காவி உடையணிந்து, கவினுறக் காட்சியளித்த அப்பெருமகன் மாசற்ற ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரை தனிச் சிறப்பு வாய்ந்தது. கம்பீரமான—கவர்ச்சியான தோற்றம்; வெண்கல மணியோசை போன்ற வளமான குரல்; நிதானத்துக்குள் அடைபட்டுக் கிடந்த அவரது உணர்ச்சி வேகம்; முதல் முறையாக அவர் காணும் மேற்கு உலகுக்கு அவர் விடுத்த செய்தி—இவையெல்லாம் ஒன்று சேர்ந்து, மெய் சிலிர்க்கும் பேரின்ப நிலையை நமக்கு அளித்தன. மனிதனின் நா வன்மைக்கு அதுவே சிகரம்."

இந்து மதம் பற்றிய தமது புகழ்பெற்ற சொற்பொழிவை சுவாமி விவேகானந்தர் நிகழ்த்தியது, செப்டம்பர் 19-ந் தேதி. வேதாந்த தத்துவத்தின் அடிப்படை உண்மைகளையும் ஆன்மாவின்

உலக சமயப் பேரவை மேடையில் சுவாமி விவேகானந்தர்

தன்மை, மனிதனின் தலைவிதி—இவை பற்றி இந்துக்களின் அடிப்படைக் கருத்துக்களையும் தெளிவாக எடுத்துரைத்தார். ஒருமை காண்பது அல்லது வாழ்வில் ஒற்றுமை—இதுவே மக்கள் குலம் அடைய விரும்பும் குறிக்கோள் என்று எடுத்துக் காட்டினார். ஆன்மா, சுத்தமானது பந்தமற்றது, சிருஷ்டிக்கப்படாதது, சத்தியத்தின் உறைவிடம் என்றெல்லாம் விளக்கினார். எனவே, மரணம், ஆன்மாவின் உறைவிட மாற்றத்தையே குறிக்கின்றது. ஒருவனுடைய இன்றைய வாழ்வு அவனது முற்பிறப்பின் செயல்களைத் தழுவியே அமைகின்றது; அவனது இன்றையச் செயல்களை ஒட்டியே வருங்காலம் இருக்கும். 'நான்' என்ற ஆணவம் ஒழியவேண்டும்; அப்படியானால்தான் ஜீவாத்மா, பரமாத்மாவை அடைய முடியும்—என்றெல்லாம் விளக்கினார்.

"உலகம் முழுவதிலும் சகிப்புத் தன்மை வேண்டும் என்று நம்புபவர்கள் மட்டுமல்ல, நாங்கள் எல்லா சமயங்களும் உண்மையானவை என்றும் ஒப்புக்கொள்கிறோம். எங்கள் நாடு, உலகிலுள்ள எல்லா தேசங்களிலிருந்தும், எல்லாச் சமயங்களிலிருந்தும் வந்த அகதிகளை ஆதரித்து வாழ்வித்த நாடு; அந் நாட்டில் பிறந்தது குறித்து நான் பெருமை கொள்கிறேன்" என்று அவர் முழங்கினார். வந்திருந்தோர், கைதட்டி ஆரவாரித்து அதனை ஏற்றனர்.

இந்திய வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளை அவர் கூறி, சிவபெருமானின் பெருமை பற்றிச் சொல்லும் பின்வரும் கருத்துள்ள பாடலையும் மேற்கோள் காட்டினார். "ஆறுகள் பலவேறு இடங்களில் உற்பத்தியானாலும் கடைசியில் கடலிலேயே சங்கமமாவது போல், இறைவனே! மனிதர்கள் பின்பற்றும் வழிகள் தோற்றத்தில் வெவ்வேறானாலும் நேரானாலும், அதற்கு மாறானாலும், உன்னை வந்து அடையவே அவை உதவுகின்றன."

விவேகானந்தர் சிக்காகோ சென்றதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று, அமெரிக்கருக்கு இந்து மதம் பற்றியும், அது பிறந்த இந்திய நாட்டைப் பற்றியும் உண்மை நிலையை எடுத்துக் கூறி விளக்குவதுதான். தம் நாட்டையும் பண்பாட்டையும் பற்றி அமெரிக்க அரங்கில் முதலில் தோன்றி விளக்கவும், பரந்த நாடான இந்தியாவின் வாழ்க்கை முறை பற்றியும் பிரச்னைகள் பற்றியும் அமெரிக்கர்கள் மேலும் அறியுமாறு செய்யவும் அவருக்குக் கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு இது; அப்போது இந்தியா புதிய உலகான அமெரிக்காவுடன் குறைவான தொடர்பே கொண்டிருந்தது.

சிக்காகோ சென்ற இந்திய மேதை விவேகானந்தர் பேசிய பொதுமை, முக்கியமாக ஆன்மீகத் துறை பற்றியதே யெனினும், மனிதனின் தேவை எதையும் அவர் அசட்டை செய்துவிடவில்லை. எல்லா மதங்களிலுமுள்ள உண்மைகளையும் போற்றிய அவர், ஏசுநாதரின் போதனைகளையும் போற்றினார். மக்கள் குலத்தின்பால் தாம் கொண்டிருந்த பரிவு காரணமாகப் பேரவையில் அவர்

சிக்காகோ நகரில் 1893-ல் நடைபெற்ற உலக சமயப் பேரவை



கூறினர் : "... கீழ்நாடுகளில் உடனடித் தேவை மதமல்ல—அது அவர்களிடம் வேண்டிய அளவு உண்டு—உணவு தான். கொந்தளிக்கும் இந்தியாவில் வாடி வதங்கும் கோடிக்கணக்கான மக்கள் வரண்ட தொண்டையுடன் கூவிக் கேட்பது, வயிற்றுக்கு உணவு வேண்டும் என்பதே... பட்டினியால் வாடுபவனுக்கு மத போதனை பயனற்றது. பசித்தவனிடம் அறிவுபதேசம் செய்வது பயனற்றது."

இவ்வாருக, அவர் சமுதாயத்தில் எது எதை முதலில் செய்ய வேண்டுமென்பதை உணர்ந்தார்; தனி மனிதன் ஆன்மீக நிறைவு பெற்று இன்பம் காண முதல் வேலை சமுதாயத்தைச் சீரழித்துவரும் வறுமையை ஒழிப்பதே என்று கண்டார்.

அனைவரும் சகோதரர்கள் என்ற தமது விரிவான கொள்கைக்கு ஏற்ப, சிக்காகோவில் விவேகானந்தர், பரந்த மனப்பான்மை கொண்ட கிறிஸ்தவர்களை மனமாற வரவேற்ருர்; அங்கு இத்தகையோர் ஏராளமாக வந்திருக்க அவர் கண்டார். அதே சமயத்தில் குறுகிய மனப்பான்மையும் வரட்டுப் பிடிவாதமும் கொண்டிருந்த அனைவரையும் எதிர்த்து அவர் பேசினர். "தாங்கள் வழிபடுவதாகப் பாசாங்கு செய்யும் கடவுளிடம் பொய்யாக நடப்பதைவிடப் போலிக் கடவுளை வழிபடும் ஒரு அஞ்ஞானியாக இருப்பதே மேல்" என்று சின்னப் புத்திக்காரர்களுக்கு அவர் இடித்துரைத்தார்.

குறுகிய தடைகள் எதுவுமில்லாத—மக்கள் மனப்போக்கு அனைத்தையும் பொறுத்து ஏற்கக் கூடிய—மெய்ஞானம் பெற வகை செய்யும் வழிகள் அனைத்துக்கும் மதிப்புக் கொடுக்கும் ஒரு பொது மதம் தேவை என்ற கருத்தை உலக சமயப் பேரவையின் இறுதிக் கூட்டத்தில் விவேகானந்தர் வெளியிட்டார். "இது போன்ற ஒரு மதத்தைப் படைத்துத் தாருங்கள்; எல்லா நாடுகளும் உங்களைப் பின்பற்றும். அசோகரின் பேரவை பௌத்தர்களின் சபையாக இருந்தது. அக்பர் கூட்டிய பேரவை இந் நோக்கமுடையதெனினும் அது ஒரு அரசவைக் கூட்டமாகவே இருந்தது. கடவுள் எல்லா மதங்களிலும் இருக்கிருர் என்று உலகம் முழுவதற்கும் பறைசாற்றும் பேறு அமெரிக்காவுக்கே கிடைத்திருக்கிறது. இந்துக்களின் பிரம்மனுகவும், ஸுராஸ்டிரரின் அஹுரமஸுதாவாகவும், பௌத்தர்களின் புத்த பிரானுகவும், யூதர்களின் யெஹோவாவாகவும், கிறிஸ்தவர்களின் பரம பிதாவாகவும் விளங்கும் இறைவன், நீங்கள் உங்களது உன்னதமான நோக்கத்தை நிறைவேற்ற உங்களுக்கு வலிமை தருவாராக. கிழக்கில் தோன்றிய தாரகை, மெதுவாக மேற்கு நோக்கிச் சென்றது; சில சமயங்களில் அது மங்கலாகவும், சில சமயங்களில் பிரகாசமாகவும் விளங்கி, அது ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, மீண்டும் பழையபடிக் கிழக்கின் அடிவானில் முளைத்தெழுந்து வருகிறது; அது முன்பு என்று மிருந்திராதபடி ஆயிரம் மடங்கு பிரகாசமாக ஒளி வீசுகிறது. உரிமையின் தாயகமே, கொலம்பியா நாடே நீ வாழ்க! பக்கத்து நாட்டின் இரத்தத்தில் கையை நனைத்திராத—விரைவில் செல்வத்தில் கொழிக்கக் குறுக்கு வழி, பக்கத்திலுள்ளவர்களைக் கொள்ளையடிப்பதே என்று ஒரு நாளும் நினைத்தறியாத உனக்கே இந்தப் பேறு கிடைத்துள்ளது; நல்லுறவு எனும் கொடி ஏந்தி, நாகரிகத்தின் முன்னணியில் நின்று முன்னேறிச் செல்லும் பேறு உனக்குத்தான் கிடைத்துள்ளது."

செப்டம்பர் 27-ந் தேதி, சமயப் பேரவையின் இறுதிக் கூட்டத்தில் நிகழ்த்திய தமது உரையில் விவேகானந்தர் தம் கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறினர் :

"கிறிஸ்தவர் ஹிந்துவாகவோ அல்லது பௌத்தராகவோ ஆகவேண்டியதில்லை; பௌத்தர், கிறிஸ்தவராகவும் ஆக வேண்டியதில்லை. ஆனல் ஒவ்வொருவரும் மற்றவரின் உணர்ச்சியை ஏற்க வேண்டும்; தம் தனித் தன்மையையும் காத்துக்கொண்டு, இயற்கை நெறிப்படி வளரவேண்டும்...

"உலகுக்கு சமயப் பேரவை உணர்த்தும் உண்மை ஏதேனும் உண்டென்ருல், அது இதுதான்; புனிதம், தூய்மை, தர்மம்—இவை எந்த ஒரு சமயத்தின் தனியுடமையல்ல; ஒவ்வொரு மதத்திலும் பெரிய பெரிய சான்ருேர்கள் - ஆண்களும் பெண்களும் - தோன்றியுள்ளனர் என்று உலகுக்கு அது புலப்படுத்தியுள்ளது. உண்மை இவ்வாறிருக்க, தன் சொந்த சமயம் மட்டுமே உயிர்வாழ வேண்டும்; மற்றவை அழிய வேண்டும் என்று யாராவது கனவு கண்டால் நான் அவனுக்காக மிகவும் இரக்கப்படுகிறேன். அவன் என்னதான் எதிர்த்த போதிலும்; 'துணை செய்; துண்டாடாதே', 'படைத்தல் செய்; அழித்தல் செய்யாதே', 'நல்லுறவையும் அமைதியையும் வளர்; பிளவுகளை வளர்க்காதே' என்று எல்லா மதங்களும் விரைவில் கொடி கட்டிப் பறைசாற்றப் போகின்றன என்று அவனுக்கு நான் சுட்டிக் காட்டுவேன்."

உலக சமயப் பேரவையின் மேடையில் ஏறி நடந்ததுமே வந்திருந்தோர் அனைவரும் தாமாகவே கைதட்டி ஆரவாரம் செய்யும் வகையில் அவர்களைக் கொள்ளைகொண்ட சுவாமி விவேகானந்தர், அமெரிக்க ஆன்மீக உலகில் ஒரு ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவதில் வெற்றி பெற்றார். அவர் எவ்வளவு தூரம் அவர்களைக் கவர்ந்து விட்டார் என்பதற்கு அவரது பேச்சு ஏற்படுத்திய எதிர்ப்புகள் தெளிவான சான்றாகும். பழமை விரும்பிகளுக்கு அவரது கருத்துகள் பிடிக்கவில்லை; அவர்கள் தங்களது உபதேசங்கள் வழியாகவும், பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் எழுதியும் கண்டனம் தெரிவித்தனர். ஆனால் எதிர்ப்பு எவ்வளவிருந்ததோ, அதைவிட அதிக ஆதரவும் இருந்தது. "உலக சமயப் பேரவையின் தலைசிறந்த பெருமகன் அவர் என்பதில் ஐயமில்லை" என்று எழுதி, "நியூ யார்க் ஹெரால்டு" அவரைப் போற்றியது. அவருடைய சொற்பொழிவுகள் எல்லாம் பெரும்பாலும் முழுக்க முழுக்க வெளியாயின. "பாஸ்ட்டன் ஈவினிங் டிரான்ஸ்கிரிப்ட்" என்னும் பத்திரிகை பின்வருமாறு கருத்து தெரிவித்தது:

"உலக சமயப் பேரவையில் கூட்டம் இறுதி வரையில் கலையாமல் இருக்கவேண்டுமென்பதற்காக, நிகழ்ச்சியின் கடைசியில் விவேகானந்தரைப் பேச வைப்பது வழக்கம். வெப்பமான ஒரு நாள், வழ வழ வென்று பேசும் ஒருவர் நெடுநேரம் பேசிக் கொண்டேயிருந்தார். ஜனங்கள் நூற்றுக் கணக்கில் கலைய ஆரம்பித்தார்கள். உடனே கூட்டத் தலைவர் எழுந்து, கடவுள் வழிபாட்டுக்கு முன்பு விவேகானந்தர் சிறிது நேரம் பேசுவார் என்று அறிவித்தார். உடனே அமைதி நிலவியது; எழுந்தவர்கள் அனைவரும் இருந்து கேட்டனர். கொலம்பஸ் மன்றத்தில் நெருக்கமாக கூடியிருந்த நாலாயிரம் மக்களும் புன்முறுவல் பூத்த வண்ணம் விவேகானந்தர் பேச்சைக் கால் மணி நேரம் கேட்பதற்காக மற்றவர்களின் பேச்சுக்களை மணிக்கணக்கில் கேட்டுக்கொண்டு ஆவலுடன் காத்திருப்பர். 'நன்கு பேசுபவரைக் கடைசியில் விடு' என்னும் பழைய நெறியைத் தலைவர் நன்கு அறிந்தவர்."

"டிரான்ஸ்க்ரிப்ட்" மேலும் எழுதிற்று: "பேரவையில் விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவு நமக்கு மேலேயுள்ள வானம் போன்று விரிவானது. சமயங்கள் அனைத்திலுமுள்ள சிறப்புக்கள் எல்லாம் அதில் இடம் பெற்றன; இவை இறுதியான உலகப் பொது மதத்துக்கு இலக்கணம். மக்கள் குலம் முழுவதிடமும் அன்பு பாராட்டல்; தண்டனைக்கு அஞ்சியோ, பலனை எதிர் பார்த்தோ இல்லாமல் கடவுள் பக்தியை வளர்க்க நற்பணியாற்றல்—இவை அவர் வற்புறுத்தியவை. அவரது கருத்துக்களின் சிறப்பு, தோற்றத்தின் பொலிவு இவை காரணமாக சமயப் பேரவையில் அவரே அனைவரையும் பெரிதும் கவர்ந்தார்."

முதலில் யாரும் அறியாத சுவாமி விவேகானந்தர், உலக சமயப் பேரவையில் செலவிட்ட பயனுள்ள இரண்டரை வாரக் காலத்தில் அவர் பெற்ற புகழும் மதிப்பும் அவர் அமெரிக்காவில் ஓய்வு ஒழிச்சல் இன்றி இரண்டாண்டுக் காலம் தங்கும்படிச் செய்துவிட்டன. இக்காலம் முழுதிலும் எப்போதும் சமய போதனையும் சொற்பொழிவுமே அவரது மூச்சாயிற்று. அமெரிக்காவின் தலைசிறந்த இரு பல்கலைக்கழகங்கள்—ஹார்வர்டும், கொலம்பியாவும்—அவருக்குத் தலைமைப் பேராசிரியர் பதவி தர முன் வந்தும் அவர் ஏற்க மறுத்துவிட்டார்; ஏனெனில் தாம் உடனடியாகப் பணியாற்ற வேண்டிய இடம் வேறு என்று அவர் நினைத்தார்.





வில்லியம் ரைட் விட்னி,
ஹென்ரி டேவிட் தோரோ

விவேகானந்தர் காலத்தில் அமெரிக்க அறிவுலக நிலை

சென்ற நூற்றாண்டின் இறுதியில் சுவாமி விவேகானந்தரின் அமெரிக்க வருகையும், சொற்பொழிவுச் சுற்றுப் பிரயாணங்களும் இவ்வளவு பேரார்வத்தை—பாதி ஆதரவாகவும் பாதி எதிராகவும்—தூண்டியது உண்மையில் பலருக்கு விந்தையாகத் தோன்றலாம். பத்தொன்பதாவது நூற்றாண்டில் அமெரிக்கா, 'பொருள் ஈட்டுவதையே நோக்கமாகக்கொண்ட ஒரு பாலைவனம், கொள்ளைக்கூட்ட முதலாளிகள் ஆட்டிப் படைத்த ஒரு நாடு, கண்ணால் காண்பதே மெய் என்று கொண்டாடிய ஒரு நாடு' என்று பொதுவாக நிலவிய ஒரு கருத்தின் விளைவாக அவ்வாறு அது விந்தையாகப் பட்டது.

சென்ற நூற்றாண்டின் பின் பாதியில் தொழில் வளர்ச்சியின் வேகம்—குறிப்பாக வடக்குப் பகுதியில்—ஓங்கியிருந்தது, நாடு மேல் திசையில் பெரிதும் விரிவடைந்தது, கூடவே பெரிய பெரிய ரயில் பாதைகள் போடப்பட்டன, சில சமயங்களில் தனிப்பட்ட சிலருக்குக் கொள்ளை லாபம் கிடைத்தது—என்பதெல்லாம் உண்மையே.

வெளிப்படையாகப் புலப்பட்ட இந்த வளர்ச்சியைக் கண்டவர்கள், அமெரிக்க வாழ்க்கையில் அப்போது இடம் பெற்றிருந்த மற்ற சக்திகள் பற்றிக் காணத் தவறிவிட்டனர். எட்வர்டு பெல்லாமி எழுதிய "திரும்பிப் பார்க்கையில்" (லுக்கிங் பேக்வர்டு) என்னும் புகழ் பெற்ற நாவலில் விளக்கப்பட்டுள்ளது போல, தொழில் வளர்ச்சியின் விளைவாகப் பிறந்த சில தீமைகளுக்கு கொள்கை அடிப்படையில் ஏற்பட்டிருந்த ஒரு வெறுப்பு; ஆன்மீக நெறிகளைக் கண்டறிய இடையருத ஒரு நீடித்த முயற்சி; நியூ இங்கிலாந்துப் பகுதியில் ராம் மோகன் ராய் செல்வாக்குப் பெற்ற காலம் முதல் முளைவிட்டுச் செழித்து வளர்ந்து வந்த சகிப்புத்தன்மையுள்ள ஒரு தாராள மதத்துக்கு வைதீகக் கிறிஸ்தவர்களிடை ஏற்பட்டிருந்த வியப்பூட்டும் எதிர்ப்பு—இவை வெளியில் தெரியவில்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் நாடு முழுதும் ஊடுருவிப் பரவியிருந்த மேற்சொன்ன ஆன்மீக, அறிவுலக மறுமலர்ச்சியைப் பகைப் புலனைக் கொண்டு, அமெரிக்காவில் விவேகானந்தரின் செல்வாக்கை விளக்கத் துணைசெய்யும் மனப் போக்குகள் இரண்டைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்வது நல்லது. இவை தனித்தனியாகப் பகுத்துக் கூறக்கூடியவை; ஆனால் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. ஒன்று, சமயங்கள் பலவற்றையும் ஒப்பு நோக்குவதில் அமெரிக்காவில் ஏற்பட்டிருந்த மாபெரும் ஆர்வம், இது வளர்ந்துகொண்டே வந்தது. மற்றொன்று, சம்ஸ்கிருதம், அதனுடன் தொடர்புள்ளவை ஆகியன குறித்து அறிவதில் அறிஞர்களிடையே வளர்ந்து வந்த பணிகள்.

ராம் மோகன் ராய் தமது நூலில் சமயங்கள், புராணங்கள் பற்றி ஓரளவு ஒப்பிட்டு ஆராய்ந்திருந்தார்; அவ்வாறு ஆராய வேண்டுமென்று கனவு கண்டவர் அமாஸ் பிரான்ஸன் ஆல்காட். ஆனால் சமயங்களை ஒப்பிடும் கலையின் தந்தை என்று பொதுவாகக் கருதப்படுபவர், மாக்ஸ் முல்லர் என்னும் ஜெர்மானிய அறிஞர். "கீழை நாட்டுப் புனித நூல்கள்" (1875—1900) என்ற பெயரில் ஒரு தொகுப்பு நூல் வெளியிட்டு, இந்திய நாட்டுச் சமயங்கள் பற்றிய அறிவை மேல் நாடுகளில் பரப்பியது அவரது மாபெரும் சாதனையாகும். முல்லரின் நூல் அமெரிக்காவில் நன்கு பரவிற்று என்றே சொல்லவேண்டும். 1873-ல் ஆக்ஸ்போர்டு சென்றிருக்கையில், ரால்ஃப் வால்டோ எமர்ஸன், அறிஞர் முல்லரைச் சந்தித்தார். பின்னர் அவர்கள் கடிதங்கள் எழுதி, உறவாடிக் கொண்டனர். "சமய நெறி அறிமுகம்" என்ற தமது நூலின் பிரதி ஒன்றைத் தம் கையெழுத்திட்டு முல்லர், எமர்ஸனுக்கு அன்பளிப்பாக அனுப்பினர்; எமர்ஸன் செய்த உதவிக்கு நன்றியும் தெரிவித்திருந்தார்.

சமய நெறி ஒப்பியல் துறையில் அமெரிக்காவில் அனேக நூல்கள் வெளியாயின; அறிஞர் உலகுக்கு மட்டுமே அத்துறை சொந்தமாயிருந்த தென்பதில்லை, "மாபெரும் சமயங்கள் பத்து" என்னும் பெயரில் ஜேம்ஸ் ஃப்ரீமன் கிளார்க் என்பவர் 1871-ல் வெளியிட்ட நூல் இவ்வகை நூல்களில் குறிப்பிடத்தக்கது. மத வெறியின்றிப் பரந்த நோக்குடன் எழுதப்பட்ட இந்நூலில் இந்து, பௌத்த மதங்கள் பற்றிப் பல அத்தியாயங்கள் இடம் பெற்றிருந்தன. இந்நூல் குறைந்தது 22 பதிப்புக்கள் வெளியாகி, அமெரிக்காவில் பரந்த நோக்கமுடையவர்கள் வெகுவாக விரும்பிப் படிக்கும் ஒரு நூலாயிற்று. ஹார்வர்டு சமயக் கல்லூரியில் பட்டம் பெற்றவர் கிளார்க்; 1810-ல் பிறந்தவர். 'யூனிட்டேரியன்' திருச்சபையைச் சேர்ந்தவர். எமர்ஸனின் நண்பர். கடந்த நிலைக் கோட்பாடு (டிரான்ஸெண்டென்ட்டலிஸம்) சங்கத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவர். உலகின் சமயங்கள் அனைத்திலுமுள்ள பொதுவான இயல்கள் எவை எவை என்று காண்பதில் சங்கத்தினர் கொண்டிருந்த ஆர்வத்தில் அவரும் பங்கு கொண்டார். (ராம் மோகன் ராயும் இதே ஆர்வமுள்ளவர்.) ஹார்வர்டு சமயக் கல்லூரியின் இனச் சமயங்கள் துறை விரிவுரையாளர்; நூல்கள் பல எழுதிய ஆசிரியர் என்ற முறையில் மேற்சொன்ன நோக்கத்தை அடைவதில் அவர் அரும் பெரும் பாடுபட்டார். ரெவரெண்ட் எட்வர்டு ஹேல் எழுதிய "அறிவுக் கதைகளின் காலம்" (தி ஏஜ் ஆஃப் ஃபேபிள்) என்னும் நூலின் திருந்திய பதிப்பில் இந்து மதம் பற்றிக் கிளார்க் எழுதிய அத்தியாயத்தின் ஒரு பகுதி சேர்க்கப்பட்டது; இந்தப் பதிப்பை வெளியிட்டவர், தாமஸ் புல்பிஞ்ச் என்பவர். ஹேல் தமது முன்னுரையில், "கடந்த 50 ஆண்டுகளில் கிழக்கு உலகின் சமய முறைகள் பற்றிப் புதிய ஆர்வம் எழுந்துள்ளது. கிளார்க் எழுதிய "மாபெரும் சமயங்கள் பத்து," ஜான்ஸன் எழுதிய "கீழ்த்திசைச் சமயங்கள்" என்பன போன்ற நூல்கள் இளம் வாசகர்களுக்கும் பிடிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். "அறிவுக் கதைகளின் காலம்" நெடுங்காலம் அமெரிக்கக் குடும்பங்களிலும், பள்ளிகளிலும் விரும்பிப் படிக்கும் புத்தகமாக விளங்கியது. பரந்த நோக்கு படைத்த சானிங், கிளார்க் போன்ற யூனிட்டேரியன் மத குருக்கள் வரிசையில் வந்தவர் ரெவ. ஹேல் என்பது குறிப்பிடத்தக்கது; இது, பத்தொன்பதாவது நூற்றாண்டில் இந்திய நாட்டுச் சமயங்கள் குறித்து அமெரிக்கர்களின் அக்கறையைக் காத்து வளர்த்ததில் யூனிட்டேரியன் திருச்சபையின் பங்கு எவ்வளவு பெரிது; எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்கும்.

எனவே, இந்தியச் சமயங்கள் பற்றி அறிஞர்களோடு சாதாரண வாசகர்களும் வாங்கிப் படிக்கக் கூடிய விவரணை நூல்கள் அதிகமிருந்தன என்பது தெளிவு. அக்காலத்தில் மற்றும் இரு குறிப்பிடத்தக்க நூல்கள் வெளியாயின; இவை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை வில்க்கின் எழுதிய கீதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலின் மறுபதிப்பு 1867-ல் நியூயார்க் நகரில் வெளிவந்தது; 1785-ல் லண்டனில் வெளியான இந் நூலின் முதற் பதிப்பு, ஏற்கெனவே நியூ இங்கிலாந்துப் பகுதிகளில் நன்கு பிரபலமாயிருந்தது. தொடர்ந்து நெடுங்காலம் அதுவே இந்திய வேதாந்தம் பற்றி அனைவருக்கும் பிடித்த அமெரிக்க இலக்கியமாக விளங்கி வந்தது.

சிறிய பட்டியல் கொடுத்தால்கூடக் குறிப்பிட மறந்து விடக் கூடாத நூல் ஒன்றுண்டு; அதுதான் ஸர் எட்வின் அர்னால்டு எழுதிய "ஆசிய ஜோதி" என்னும் நூல். பத்தொன்பதாவது நூற்றாண்டில் அமெரிக்காவில் இந்நூலுக்குக் கிடைத்த பேராதரவு வியப்பூட்டுவதாகும்.

சமயங்களை ஒப்பு நோக்கி ஆராய்வதன் மூலம் இந்தியாவைக் கண்டறிந்த அமெரிக்க எழுத்தாளர்களின் குழுவுடன் ஓரளவு சேர்த்து எண்ணத் தக்கவர்கள், இந்திய இயல்கள் பற்றி அறிந்த அமெரிக்கர்களின் ஒரு சிறு குழுவினர். பேராசிரியர் நார்மன் பிரவுன் கூறுவது போல, இவர்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டிலும் "இந்தியாவைப் பற்றிப் பயனுள்ள பண்பியல் அறிவை வளர்க்கும் சிறந்த மரபு ஒன்றை ஏற்படுத்தினர்."

1842-ல் அமெரிக்கக் கீழ்த்திசை இயல் சங்கம் நிறுவப்பட்டது. ஆனால் சம்ஸ்கிருத மொழி, அந்த மொழியிலும் பிற மொழிகளிலும் எழுதப் பெற்ற பண்டைய நூல்கள் இவற்றைப் படிப்பது அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் வேரூன்றுவதற்கு மேலும் சிறிது காலம் பிடித்தது. குறிப்பிடத் தக்க முதல் அமெரிக்க சம்ஸ்கிருத அறிஞர் எட்வர்டு எல்பிரிட்ஜ் சாலிஸ்பரி என்பார்; 1840–50 ஆண்டுகளில் அவர் யேல் பல்கலைக் கழகத்தில் சில மாணவர்களுக்கு சம்ஸ்கிருதம் கற்பித்தார்.

யேலில் சாலிஸ்பரியிடம் படித்த மாணவர்களில் ஒருவர், வில்லியம் டுவைட் விட்னி. இவர், இந்திய இலக்கியங்களை முதல் நூல்கள் எம்மொழிகளில் வெளியாயினவோ, அவற்றிலேயே படித்து ஆராயும் மாபெரும் அமெரிக்க அறிஞராகப் பிற்காலத்தில் விளங்கினர். பழைய புது இங்கிலாந்துப் பகுதியைச் சேர்ந்த மாஸச்சூஸெட்ஸ் மாநிலத்தில் பிறந்தவர், விட்னி; இயற்கை பற்றி ஆராய்வதில் மிகுந்த அக்கறையுள்ள உரம் பெற்ற இளைஞர் அவர்; பெரும்பாலும் வெளியிலேயே இருப்பார். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற பின்பு, அவர் மருத்துவக் கலை பயிலத் தொடங்கினர். உடல் நலக் குறைவு ஊறு செய்துவிட்டது. உடல் முழு நலம் பெற ஓய்வெடுக்கையில், தமது சகோதரர்களின் புத்தகங்களுக்கிடையில் சம்ஸ்கிருத இலக்கண நூல் ஒன்று இருக்கக் கண்டார்; இது ஃபிரான்ஸ் பாப் எழுதியது. முடியாமல் முடங்கிக்கிடந்த இளைஞரை இது கவர்ந்தது; அவர் ஆசையுடன் படித்தார்.

பேராசிரியர் சாலிஸ்பரியின் கீழ் சம்ஸ்கிருதம் படிப்பதற்காக விட்னி, 1849-ல் யேல் சென்றார். ஓராண்டுக்குப்பின் அவர் பெர்லின் சென்றார்; அங்கு ஃபிரான்ஸ் பாப், வெபர் போன்ற ஜெர்மன் அறிஞர்களின் துணையுடன் தொன்மையான இந்திய மொழிகள் பற்றிய தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார். அவர் மீண்டும் அமெரிக்கா திரும்பி வரும் காலத்துக்குள், பழமையான இந்து வேதங்களைப் படிப்பதென்பது அவரை நிலையாகப் பற்றிக்கொண்டு விட்டது. எனவே, 1854-ல் யேல் பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருத மொழி, இலக்கியம் பற்றிய துறையில் தலைமைப் பேராசிரியர் பதவியை ஏற்குமாறு அவரைக் கேட்டபோது, உற்சாகத்துடன் அவர் ஏற்றுக்கொண்டார்.

பழமையான இந்திய நூல்களின் இரகசியங்கள் பற்றி விட்னி நெடுங்காலம் ஏராளமான யேல் மாணவர்களுக்குக் கற்பித்ததுடன் இத்துறையில் மேலும் ஆராய்ச்சியும் நடத்தி வந்தார். **அதர்வ வேதம்** பற்றிய அவரது ஆராய்ச்சிகளும் நூல்களும் குறிப்பிடத்தக்கவை; அவர் ஆங்கிலத்தில் இயற்றிய சம்ஸ்கிருத இலக்கணம் (1879) என்னும் நூல் இன்றும் தரமுள்ள ஒரு சிறந்த படைப்பாகக் கருதப்பட்டு வருகிறது.

1961-ல் அது இந்தியாவில் மறுபடிப் பதிப்பிக்கப்பெற்றது. விட்னி அல்லது அவரது சீடர்களில் யாரிடமாவது படிக்காத சம்ஸ்கிருத அறிஞர் யாரும் அமெரிக்காவில் கிடையாது.

யேல் பல்கலைக் கழகத்தில் விட்னிக்குப் பிறகு சம்ஸ்கிருதத் துறையின் தலைவராக வந்தவர், எட்வர்டு வாஷ்பர்ன் ஹாப்கின்ஸ் (1857—1932); நாம் இங்கு எடுத்துரைக்கும் பொருளைப் பொறுத்த வரையில் இவர் தனி முக்கியம் வாய்ந்தவர். விட்னியைப் போன்றே இவரும் மாஸச்சூஸெட்ஸில் பிறந்தவர்; நியூ இங்கிலாந்தின் மிகப் பழமையான - பெரிதும் மதாபிமானம் படைத்த குடும்பத்தின் வழிவந்தவர். உயர்வான மொழி இயல், இலக்கிய ஆராய்ச்சித் துறைகளில் அவர் ஆற்றியுள்ள பங்கு பெரிது. எனினும் குறிப்பாக, இந்திய நாட்டுச் சமயங்களை நன்கறிந்த அறிஞர்; விளக்கம் தரும் வல்லுநர் என்று தனிப் புகழ் பெற்றவர். அவர் எழுதிய, "இந்திய நாட்டுச் சமயங்கள்" (1895) என்னும் நூல் அமெரிக்கர்களுக்கு இத்துறையில் பல்லாண்டுகள் வழிகாட்டி வந்த முக்கியமான—ஆதாரபூர்வமான நூல்களில் ஒன்றாகும். "இந்தியாவின் அற நெறிகள்" என்ற பெயரில் 1924-ல் அவர் வெளியிட்ட துணை - நூல், அறிஞர் உலகில் புகழ் பெற்றது. ஆனால், 1923-ல் வெளியான அவரது "சமயங்களின் பிறப்பும் வளர்ச்சியும்"

என்னும் நூல்தான் அமெரிக்கப் பொது மக்களிடையே சமயங்களை ஒப்பு நோக்கும் துறையில் ஆர்வமூட்டியது; ஏராளமாக விற்பனையுமாயிற்று.

பிற்காலத்தில், இந்திய இயல்கள் துறையில் தலைசிறந்த கல்வி நிலையம் என்னும் புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்தில் 1872 வரையில் சம்ஸ்கிருதம் இடம் பெற வில்லை. இப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சார்ல்ஸ் ராக்வெல் லான்மான், மேற்கு உலகின் மாபெரும் சம்ஸ்கிருத அறிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படுவது வழக்கம். இவர், விட்னியின் மாணவர்; 1871-ல் யேல் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் 40 ஆண்டுகள் சம்ஸ்கிருதப் பேராசிரியராக விளங்கிய இவர், ஆசிரியராகவும் அறிஞ ராகவும் தனிச் சிறப்பு வாய்ந்த பணியாற்றியுள்ளார். 1884-ல் "சம்ஸ்கிருத வாசகம்" (ரீடர்) என்னும் வெளியீடு முதன் முதலாக வந்தது; பின்பு அது பலதடவைகள் வெளியிடப்பட்டு, மாணவர்களில் பல தலைமுறையினருக்குப் பாடப் புத்தகமாக விளங்கிற்று.

1889-ல் லான்மான் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம்செய்து, ஹார்வர்டு நூலகத்துக்காக அரிய சுவடிகளைச் சேகரித்தார். ஹாப்கின்ஸைப் போலவே, இந்திய நாட்டுச் சமயமே லான்மானை யும் பெரிதும் கவர்ந்தது. 1890-ல் அவர் "இந்துக் கடவுள்கள் பற்றிய அரிச்சுவடி" (பிகினிங்ஸ் ஆஃப் ஹிண்டு பாந்தீஸம்) என்னும் தமது நூலை வெளியிட்டார். எனினும் அமெரிக்க நாட்டுக் கீழ்த்திசை இயல் அறிவுலகுக்கு அவர் ஆற்றிய மிகப் பெரும் பணி, "ஹார்வர்டு கீழ்த்திசை இயல் ஏடுகள்" (ஹார்வர்டு ஓரியன்ட்டல் ஸீரீஸ்) என்ற பெயரில் வெளியீடுகள் வரத் திட்டமிட்டு, தாமே தொகுப்பாசிரியராகப் பொறுப்பேற்றதுதான். 1895-ல் வெளிவரத் தொடங்கிய இவ் வெளியீடு இன்றுவரை வந்துகொண்டிருக்கிறது; நாற்பது தொகுதிகளுக்குமேல் வந்துள்ளன. பிற்காலத்தில் இலக்கியத் துறையில் பெரும் புகழ்பெற்ற அவரது மாணவர்கள் பலரில் இருவர்: டி. எஸ். இலியட், இர்விங் பாபிட்.

இன்றைய தலைசிறந்த அமெரிக்க சம்ஸ்கிருத அறிஞர்களில் ஒருவர், டபிள்யூ. நார்மன் பிரவுன்; இவர் பென்ஸில்வேனியா பல்கலைக் கழகத்தில் பணிபுரிகிறார். இவர் இந்தியாவுக்குப் பலமுறை போய் வந்தவர். இவர் ஆற்றியுள்ள அரும்பணியில் பெரும் பகுதியும், நிலைத்து, விளங்கும் "ஹார்வர்டு கீழ்த்திசை இயல் ஏடுகள்" தொகுப்புக்களிலும், அமெரிக்கக் கீழ்த்திசை இயல் சங்கத்தின் வெளியீடுகளிலும், கொலம்பியா முதலிய பல்கலைக் கழகங்களின் வெளியீடு களிலும் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவைப்பற்றி அறிவதில் அமெரிக்க மக்களிடையே விரிவான ஆர்வம் ஏற்படுமாறு தூண்டியவர்கள் மேலே குறிப்பிட்ட துறையிலுள்ள அமெரிக்க அறிஞர்கள் மட்டுமே என்று கூறுவது, இக்கட்டுரையின் நோக்கமல்ல. மிகச் சிறப்பாகச் சொல்வதாயினும்கூட, சம்ஸ்கிருத மாணவர்கள் தொகை அரியது, சிறியது; இரண்டாம் உலகப்போர் வரையில் எட்டு அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் பாடத் திட்டங்களில் மட்டுமே சம்ஸ்கிருதம் இடம் பெற்றிருந்தது. எனினும், மேலே கூறிய இந்திய இயல் அறிஞர்கள் பொறுப்புடன் முறையாக ஆராய்ந்து, கற்பித்து வந்துள்ளார்கள். இது, இந்தியாவின் சமயங்கள்பற்றி மற்றவர்கள் பரப்பி வந்த மேம்போக்கான அறிவு திருந்திச் செம்மை பெறத் துணை செய்தது என்பதில் ஐயமில்லை.

இதுவரையில் கூறிய சிறிய வரலாற்றிலிருந்து ஒன்று தெளிவாகும்: 1893-ல் சுவாமி விவேகா னந்தர் அமெரிக்கா வந்து சேர்ந்தபோது, அங்குள்ள அறிஞர்களும் கவிஞர்களும் ஆற்றிய பணி அந்நாட்டு அறிவுலகில் ஒரு உற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்திருந்தது; எவ்வளவுதான் குறை யுள்ளதாயினும் இந்தியா பற்றியும் அதன் சமயங்கள் பற்றியும் ஓரளவு அறிவு படைத்த சிறந்த மக்கள் அங்கிருக்க அவர் கண்டார் என்பதே அது. விவேகானந்தரின் வருகை பெரும் அளவில் அவ்வறிவுவளரத் துணை செய்தது என்பதில் ஐயமேயில்லை.



கல்கத்தா சம்ஸ்கிருதக் கல்லூரியில் 1961 ஜனவரியில் நடைபெற்ற சிறப்புப் பட்டமளிப்பு விழாவில், டாக்டர் வில்லியம் நார்மன் பிரவுன் 'ஞான ரத்னாகர' பட்டம் பெறுகிறார்; வழங்குபவர், கல்லூரி முதல்வர் டாக்டர் கௌரிநாத் சாஸ்திரி

அமெரிக்காவில் விவேகானந்தரின் தொண்டுகள்

உலக சமயப் பேரவையில் கலந்து கொண்ட விவேகானந்தர் இரண்டு முறைகள் அமெரிக்கா சென்றார்; மூன்றாண்டுகளுக்கு மேலாக அங்கு வாழ்ந்தார். பேரவையில் அவர் பெற்ற வரவேற்பு காரணமாக நாட்டில் அவரைப்பற்றி அக்கறை உண்டாயிற்று. அதன் பயனாக அவர் நாடு நெடுகிலும் பிரயாணம் செய்தார். எண்ணற்றோரின் முன்னிலையில் சொற்பொழிவாற்றிய அவர், தம்முடைய கூற்றுக்களை விரும்பியேற்று அவை பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டும் என்று நினைப்போர்க்கும் தனித் தனியாக, தெளிவுபடச் சொன்னார்.

மிகச் சிலரைக் கொண்ட கூட்டத்தார் முன்னிலையில் விவேகானந்தர் தம்முடைய கருத்துக்களைச் சொல்லுதல் வேண்டும் என அவருடைய பழைய அமெரிக்க மாணவர் ஒருவர் விரும்பினார்.

எனவே, அவர் செயின்ட் லாரன்ஸ் ஆற்றின் கரையிலுள்ள தவுஸன்ட் ஐலண்ட் பார்க்கில் 1895-ம் ஆண்டு கோடைக் காலத்தில் இரண்டு மாதச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார். பூங்காவின் இயற்கையெழில் விவேகானந்தரைக் கவர்ந்தது. அங்கிருந்தபோது ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்கு தக்ஷிணேஸ்வரத்தில் அருள் செய்த காட்சி அவருக்கு நினைவு வந்ததாம். தம்முடைய குருநாதரை நெஞ்சால் வழிபட்டு மாணக்கர்க்கு அறிவுரைகள் வழங்குவதில் அவர் கருத்து செலுத்தினர்.

தவுஸண்ட் ஐலண்ட் பார்க்கில் நடைபெற்ற சமய வகுப்புகளைக் கிறிஸ்தவ சமயம் பற்றிய சொற்பொழிவுடன் அவர் தொடங்கினர். மாணவருள் பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்களாக இருந்தமைதான் அதற்குக் காரணமாகும். வரலாறு, தத்துவம், விஞ்ஞானம், ஆன்மீக வாழ்வு பற்றிப் பல துறைகளில் அவர் அவர்களுக்கு அரிய செய்திகளை விளக்கினர். அவருடைய எல்லாச் சொற்பொழிவுகளும் எழுத்தில் இடம் பெறவில்லை என்றாலும் அவற்றைக் கூர்ந்து கவனித்துப் பயன்பெற்ற அவருடைய மாணவருள் ஒருவரான மிஸ் எஸ். இ. வால்டோ என்பவர் பின்வருமாறு தம் கருத்தினைக் கூறியுள்ளார்.

“வாழ்க்கையில் அதிர்ஷ்டம் உள்ளவர்கள்தாம் செயின்ட் லாரன்ஸ் தீவில் சுவாமிகளின் மாணவராயினர். அங்கு கழித்த சில வாரங்கள் நினைவிலிருந்து நீங்காதவையாகும். கொஞ்சமும் எதிர்பாராத வகையில்தான் எங்கள் ஆன்மீக அறிவைப் பெருக்கிக் கொள்ளும் அந்த வாய்ப்பு கிடைத்தது. அதனால்தான் நியூயார்க்கிலிருந்து செயின்ட் லாரன்ஸ் தீவை நோக்கி உற்சாகத்தோடு நாங்கள் புறப்பட்டோம். சுவாமிகளுக்கு நாள்தோறும் தொண்டு செய்வதில் நாங்கள் மகிழ்ந்தோம். மனம் நிறைந்த நன்றியுணர்வோடு அவருடைய சொற்பொழிவுகளை நாங்கள் கேட்டோம். முழு மனத்தோடு அவர் பேசினர்; உள்ளொளி பெற்றவர்போல் அவர் கற்றுக்கொடுத்தார். அவர் பேசியவற்றைக் குறிப்பு எடுக்க முடியவில்லை. ஆனால் அவர் சொன்ன அருங் கருத்துக்கள் அவ்வளவும் எங்களுடைய உள்ளங்களில் அழிக்க முடியாத அளவில் பதிந்து விட்டன.

“எங்களை ஆன்மீகத் துறையில் ஆர்வமுடையவர்களாகச் செய்யும் ஆற்றல் அவரிடமிருந்தது. தம்முடைய கருத்துக்களையெல்லாம் எங்களோடு பரிமாறிக்கொள்வதில் அவருக்கிருந்த ஆர்வத்தை எங்களால் மறக்க முடியவில்லை. அவர் தாம் பட்ட பாடுகளை மீண்டும் எங்கள்முன் எடுத்துக் காட்டினர். குருநாதரே அவர் வாயிலாகப் பேசுவதுபோல் தோன்றும்; எல்லாச் சந்தேகங்களையும் போக்கி, எல்லாக் கேள்விகளுக்கும் விடையளித்து, எல்லா ஐயங்களையும் அகற்றுவது போல் தோன்றும். பல வேளைகளில் அவர் தம்மை மறந்த காட்சியை நாங்கள் கண்டிருக்கிறோம். அப்போது நாங்கள் மூச்சு விடவும் அஞ்சினேம்; அவர் எண்ணத்தைக் கலைத்து அவர் பேச்சுக்குத் தடைபோட விரும்பவில்லை.

“சுவாமி விவேகானந்தர் போன்ற அறிஞரோடு சேர்ந்து வாழுகின்ற நிலை எப்போதும் உள்ளுணர்வு ஊட்டிக்கொண்டேயிருக்கும். காலை முதல் மாலை வரை அப்படியே இருக்கும். எப்போதும் நாங்கள் தீவிர ஆன்மீகச் சூழ்நிலையில் வாழ்வோம்...மிகச் சிறந்த ஒருவரை எங்கள் ஆசிரியராகப் பெற்ற பாக்கியத்தை எண்ணிப் பெருமிதம் கொண்டோம். அவர் சொன்ன அத்துணையும் எங்களுக்குப் புதியவை. அதனால் நாங்கள் மிகவும் மெதுவாகவே அவற்றைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் சுவாமிகளின் பொறுமையும் ஆர்வமும் குறைந்ததும் தேய்ந்ததும் இல்லை.”

எந்த ஒரு அமைப்பும் ஒரு ஆன்மீக நோக்கத்தோடு கூடியதாக இருக்க வேண்டுமேயொழிய உலக விஷயங்களில் பற்றுக் கொண்டதாக இருக்கக் கூடாது என்று விவேகானந்தர் அடிக்கடி கூறுவார். அதாவது சுறுசுறுப்பும், தூய்மையும், தன்னலம் கருதாத தன்மையும், உயர்வான நோக்கமும், மற்றெல்லா விஷயங்களையும்விட உண்மையை அறிவதையே சிறந்ததெனக் கருதும் பண்பும் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து இயங்குவதையே அவர் அமைப்பாகக் கருதினர். சமுதாயத்தின்மீது ஒரு உண்மையான அன்பு, உலக இச்சைகளைத் துறக்கும் நோக்கம், தந்நலமற்ற சேவை செய்யும் கருத்து இவைதாம் மேற்கண்ட நிலைக்கு அழைத்துச் செல்லும் செயலாகும். தவுஸண்ட் ஐலண்டு பார்க்கில் தம்முடைய ஆன்ம உணர்வைப் பற்றிப் பேசும்போது விவேகானந்தர், “என்னுடைய ஆன்மா பந்தங்களினின்று அறுபட்டு சுதந்திர நிலையில் இருக்கிறது. எனக்கென்று எதுவுமே இல்லை. எனவே இவ்வுடலுக்கு எது நிகழ்ந்தாலும் நிகழாவிட்டாலும் எனக்குக் கவலை இல்லை. நான் கடவுளின் குழந்தை. உலகுக்கு உணர்த்தக்கூடிய உண்மையொன்று என்

மனத்திலுள்ளது. அதனுல் கடவுள் நான் கூறவிருக்கும் உண்மைக் கருத்துக்களுக்காக என்னுடன் சேர்ந்து உழைக்கக்கூடிய துணிவுள்ள சிறந்த தொண்டர்களை அனுப்பியருள்வார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது" என்ருர்.

விவேகானந்தர் தம்முடைய உழைப்பின் பலன்கள் பற்றிக் கவலையுற்றதில்லை. எந்த ஒரு செயலும் பற்றற்ற உணர்வோடு செய்யப்படுமாயின் அது ஒருவருடைய உள்ளத்தைப் புனிதமாக்கும் என்று அவர் நம்பினர். திட்டமிட்ட ஆக்க வேலைகளைச் செயல்படுத்தப் பலர் தேவை. அதனுல்தான் பலரைக்கொண்ட தனி அமைப்பு தேவை என்று தாம் நம்புவதாக அவர் கூறினர். இவ்வாறுதான் நியூயார்க்கில் 1894-ம் ஆண்டில் முதன் முதலாக வேதாந்த சங்கம் நிறுவப்பட்டது. இங்கு அவருடைய சீடர்கள் தங்களுடைய பணியினைத் தொடர்ந்து செய்ய ஆர்வம் காட்டினர். தொடக்க முதலாக இந்தச் சங்கத்தின் உறுப்பினராயிருந்தோருள் குறிப்பிடத்தகுந்தோர்: சுவாமி கிருபானந்தா, அபயாநந்தா, யோகானந்தா ஆகியோரும் அதன் தலைவரான ஃபிரான்ஸிஸ் எச். லெகட் என்பாருமே ஆவர். அன்று தொடங்கிய ஆர்வம்தான் இன்று அமெரிக்காவில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட வேதாந்த சங்கங்கள் கிழக்குக் கரையிலிருந்து சிக்காகோ, செயின்ட் லூயி முதலிய பட்டணங்களின் ஊடாக மேற்குக் கரையில் உள்ள கலிஃபோர்னியா வரையில் தோன்றக் காரணமா யமைந்தது.



விவேகானந்தரையும் அவருடைய நோக்கங்களையும் பாராட்டிய அமெரிக்கர் பலர் தங்களுடைய பாராட்டுதலையும் நன்றியறிதலையும் வேறு பல வழிகளிலும் தெரிவித்துக் கொண்டனர். பல பெரிய மனிதர்கள் அவருக்கு நன்கொடைகள் வழங்கினர். அவ்வாறு நண்பர்கள் பலர் வழங்கிய உதவிதான் இன்று கங்கையாற்றின் கரையிலுள்ள பேலூர் மடத்தின் இடத்தை அவர் வாங்குவதற்குப் பெரிதும் துணையாயிற்று.

அமெரிக்க அறிஞர் உலகமும் விவேகானந்தரைப் பெரிதும் மதித்துப் போற்றியது. ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் தத்துவப் பிரிவில் பேசுமாறு அவர் அழைக்கப்பட்டார். அவரை அறிமுகம் செய்து, பல்கலைக் கழக அறிஞர் ரெவரெண்ட் சி. சி. எவரெட் பேசுகையில், "பெரும்பாலோர்க்கு எங்கோ எட்டாத் தொலைவில் உள்ளது போலவும், கனவு போலவும் தோன்றுவது வேதாந்த நெறி. ஆனுல் அந் நெறியில் நம்பிக்கை கொண்டு, உண்மையில் அதன் வழி நின்று வாழும் மதி நுட்பம் படைத்த ஒரு பெரியவரை நேரில் காண்பது அரியதோர் இன்பமாகும்......மேலை நாட்டவர்களாகிய நாம் பன்மையை அறிவதில் மூழ்கியுள்ளோம். ஆனுல் உறைவது ஒருமையிலேயே பன்மை என்பதை நாம் உணர்ந்தால் ஒழியப் பன்மை என்பது என்ன என்று புரிந்து கொள்ள முடியாது. ஒருமையின் உண்மையைக் கீழ்த்திசை நமக்குக் கற்பிக்கக் கூடும்; இப் படிப்பினையை நமக்குத் தெளிவாக விளக்கியவர், விவேகானந்தர்; எனவே, அவருக்கு நாம் கடமைப் பட்டுள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

1899-ம் ஆண்டில் இறுதியாக விவேகானந்தர் அமெரிக்கா போயிருந்தபோது, தம் கொள்கைகளை நிலைநிறுத்தித் தொண்டு செய்யவல்ல பல அமைப்புக்களை அவர் கண்டார். தாயகம் திரும்புகையில் நியூயார்க்குக்கு அருகில் உள்ள காட்ஸ்கில் மலைச்சாரலையடுத்த பகுதியில் செல்



வாக்கு மிகுந்த ஒருவரின் இல்லத்தில் அவர் தங்கினர். இந்த இயற்கைச் சூழ்நிலை அவர் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. அங்குதான் அவருடைய புகழ்பெற்ற சிஷ்யையான நிவேதிதா அவருடன் சேர்ந்துகொண்டார். சகோதரி நிவேதிதா இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.

கலிஃபோர்னியாவுக்குச் செல்கையில், புகழ் பெற்ற நியூயார்க் வேதாந்த சங்கத்தில் அவர் சொற்பொழிவாற்றிப் பலர்க்குக் காட்சியளித்தார்; வழியில் சிக்காகோ நகரிலும் தோன்றினர். பின்னர் லாஸ் ஏஞ்செல்ஸில் அவர் ஆற்றிய தொண்டுகள் பற்றி 'யூனிட்டி' என்ற அமெரிக்கப் பத்திரிகை பின்வருமாறு எழுதியது: "கிறிஸ்துநாதர் நமக்கு அருளிய சமயத்தை விட ஒரு மேலான சமயத்துக்கு நம்மை மாற்றிவிட இந்து சமயப் பிரசாரகர்கள் நம்மிடையே இல்லை. உண்மையில் ஒரே ஒரு சமயந்தான் உண்டு என்பதைச் சமயத்தின் பெயரால் காட்டுவதற்கே அவர்கள் வந்திருக்கிறார்கள். நாம் நம்புவதைச் செயலில் காட்டுவதே நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயல் என்று சுட்டுவதே அவர்கள் நோக்கம். நாம் விவேகானந்தருடைய எட்டுச் சொற்பொழிவுகளைக் கேட்டோம். அவை யாவும் நம்மை மகிழ்விக்கவே செய்தன. பல்கலைக் கழகத் தலைவரது அறிவாற்றலும், ஆர்ச் பிஷப்பின் மாண்பும், கட்டற்ற இயற்கையான குழந்தையின் வசீகரமும் சேர்ந்த ஓர் உருவமாக அவர் விளங்கினார்."

இந்தியப் பேரறிஞரான விவேகானந்தர் கலிஃபோர்னிய மக்கள் முன்னர் தம்முடைய கம்பீரத் தோற்றத்தோடும் ஆழ்ந்த அறிவோடும் மட்டும் விளங்கவில்லை. பொதுவான குணங்கள் நிரம்பிய சாதாரண மனிதராகவும் காட்சியளித்தார். நுணுக்கமான கருத்துக்களைச் சுருங்கக் கூறி விளங்க வைத்தல், வேதாந்த நுண்கலையைத் தெளிவாக விளக்குதல், இந்து சமயத்திலும் கிறிஸ்தவ சமயத்திலும் உள்ள உபதேசக் கதைகளைச் சொல்லிக் கேட்போரை மகிழ்வித்தல் ஆகிய அருந் திறன்களெல்லாம் அவரிடம் விளங்கின.

தம்முடைய சொற்பொழிவுகளில் இடையிடையே நகைச் சுவையை வழங்கிடவும் அவர் தவறுவதில்லை. ஞானிகளிடையே உள்ள தீர்க்க தரிசன ஆற்றல் பற்றி அவர் ஒருசமயம் பேசுகையில், "நான் சிறுவனாகத் தெருக்களில் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவ்வழியாக வந்த சாது ஒருவர் என் தலைமீது கைவைத்தபடி என்னைப் பார்த்து, 'குழந்தாய் என்றைக்காவது ஒரு நாள் நீ மாண்பு மிக்கவனாக விளங்கப் போகிறாய்' என்றார். இப்போது நீங்கள் பாருங்களேன் நான் எங்கிருக்கிறேன் என்று!" என்று தம் வாழ்நாளில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றினைச் சொல்லி மக்களைப் பெரிதும் சிரிக்க வைத்தார். இன்னொரு சமயம் அவர் பின்வருமாறு சொன்னார்: "கிறிஸ்தவ சமயம் கூறும் நரகம் என்னை அச்சுறுத்துவதேயில்லை. நான் தாந்தே இயற்றிய 'இன்ஃபர்னோ'வை மூன்று முறைகள் படித்திருக்கிறேன். ஆனாலும் நான் எந்தவித பயங்கரத்தையும் அனுபவிக்கவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இந்து சமயம் கூறும் நரகங்கள் பலவாகும். உதாரணமாக, அளவு கடந்த உணவுப் பிரியன் ஒருவன் இறந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். நரகத்தில் அவன் முன்னிலையில் சுவையான உயர்ந்த உணவுப் பொருள்கள் மிகுதியாக இருக்கும். அவன் குடல் ஆயிரம் மைல்கள் நீளமாக இருக்கும். வாயோ குண்டூசியின் தலைபோலச் சிறியதாயிருக்கும். எண்ணிப் பாருங்களேன் அவன் நிலைமை பற்றி". மக்கள் மனங் கவரப் பேசுவதில் வல்ல விவேகானந்தர், மனித இயல்பு பற்றி நன்கறிந்தவர்.

அமெரிக்காவில் விவேகானந்தர் தமது தொண்டுகளால் அடைந்த மதிப்பு அவர் அந் நாட்டில் இருந்த அளவும் வளர்ந்து கொண்டேயிருந்தது.

இந்தியாவின் பிரதிநிதியாக அமெரிக்காவுக்கு வந்த விவேகானந்தர் பல புதுமைக் கருத்துக்களைச் சொல்லிப் புகழுக்குரியவராக விளங்கிய போதிலும், அவர் புதிதாகக் கண்ட நாட்டின் மாணவராகவும் விளங்கினர் என்றே கூறவேண்டும். அவர் அடிக்கடி தம் சொற்பொழிவுகளின் வாயிலாக வெளிப்படுத்திய பல கருத்துக்கள், அமெரிக்க மக்களிடையே அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்புணர்ச்சியைத் தெளிவு படுத்துவனவாக இருந்தன. அவர் அமெரிக்கர்களின் சுதந்திர உணர்ச்சிக்கும் தம்முடைய உலக சமத்துவ ஒருமைப்பாடான வாழ்வின் லட்சியத்திற்கும் உள்ள சம்பந்தத்தை உணரலானர். இந்த ஈடுபாட்டினலேதானே, என்னவோ, இரண்டாவது முறையாக அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கு முன்பு 1898-ம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் தேதி காஷ்மீரில் தம்முடைய அமெரிக்கச் சீடர்களுடன் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த விவேகானந்தர், அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தின் ஆண்டு விழாவினைத் தாம் கொண்டாட வேண்டும் என ஏற்பாடு செய்தார். அவருடைய சீடர்கள் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் "ஜூலை நான்காம் நாள்" என்னும் தலைப்பில் தாம் எழுதிய கவிதையினை அவர்களுக்கு அந் நாளில் அவர் படித்துக் காட்டினர். அப்பாடல் வருமாறு:

ஜூலை நான்காம் நாளுக்கு அஞ்சலி

இறந்தோர் மேல் போர்த்தும் கருந்துகிலே யன்ன
ஏக்கம் தந்து இரவெல்லாம் நிறைந்திருந்த மேகங்கள்
கலைந்தோடுவ, காண்! வந்து நீ
தொட்டனை, என்னே விந்தை உலகம் விழித்தது.
பறவைகள் ஒன்றாய்ப் பாடின; பனிநனை
மலர்கள் நின்னை வாவென
மின்னும் இதழால் அழைத்தன;
அன்பினைக் காட்டிடும் வகையினில் ஏரிகள்
தாமரைக் கண்கள் நூறாயிரம் மலர
நின்னை வாவென நல்வரவளிக்க
ஜோதி தேவனே! வருக! வருக!
சுதந்திரத்தை வீசிடும் சூரியனே
இன்று புது வரவேற்பு உனக்கு!
காலமும் நேரமும் கருதி
உலகம் காத்ததை நீ அறிவாய்!
வாழ்வும் சாவும் கருதாது
வீடும் வாயிலும் நண்பர் பற்றும்
மறந்துனை நாடிக் கடலும்
கொடிய கானும் கடந்தனர்;
பின்னர் வந்தது பலன்தரு நாளே;
வழிபாடு அன்பு தியாகம் எல்லாம்
முழுதுற முற்றின; ஏற்றனை; எழுந்தனை;
மனித குலத்துக்குச் சுதந்திர
ஒளியினைப் பொழிந்து உதயமாயினை;
உனதொளி உலகெலாம் வீசும் வரை,
நாடுகள் நின்னொளியால் ஒளிரும் வரை

மக்கள் விலங்ககன்று மகிழ்ந்து
தங்கள் பொன்னான வாழ்வை உணர்ந்து
கையுயர்த்தி மனமகிழ்ந்து களிக்கும் வரை,
ஓ தேவனே! நில்லாமல் நின்னுடைய
எதிர்க்க வொண்ணா வழியில்
மென்மேலும் முன்னேறு வாயே!

விவேகானந்தர்
கண்ட
அமெரிக்கா

பத்தொன்பதாம் நூற்றாண்டு அமெரிக்காவின் நிலையை நன்கறிந்த ஒரு பார்வையாளராகவும், அமெரிக்கா பற்றிய நுணுக்கமான செய்திகளை எல்லாம் தெளிவாக அறிந்த ஒரு மாணவராகவும் குறிப்பிடுமளவில் விவேகானந்தர் விளங்கினார். அமெரிக்காவுக்கு அவர் கொடுத்தது மட்டுமல்ல, கொள்ளவும் செய்தார் என்பதற்கு ஆதாரமாக அவர் "ஒருவனிடம் புதைந்து கிடக்கும் ஆற்றல் அனைத்தையும் வெளிக் கொணர அமெரிக்கா ஒரு சிறந்த பயிற்சிக் களமாகும்" என்றார். அமெரிக்காவின் இந்தத் தன்மை தம்மை அங்கு சுற்றுப்பயணம் செய்யத் தூண்டியது என்பது அவர் குறிப்பு. "இந்தியாவில் பல ஆண்டுகளாகச் சுற்றுப் பயணம் செய்த நான், என் நாட்டு மக்களின் நன்மைக்காகத் தொண்டாற்ற விரும்பினேன். ஆனால் என் எண்ணம் நிறைவேறும் வழியைக்காண முடியவில்லை. அதனால்தான் அமெரிக்காவை அடைந்தேன்.—இதுதான் என் முதல் படி" என்று அவர் கூறுகின்றார்.

• விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்கு வாழ்ந்த மக்களில் பலர் பல நாடுகளிலிருந்து வந்து புதிதாகக் குடியேறியவராயிருந்தனர். அதுபற்றிக் குறிப்பிடும்போது அவர், "தங்கள் சொந்த நாடுகளில் எந்த வித வசதியும் இல்லாத ஏராளமான பேர்கள்—கழித்துக் கட்டப்பட்டவர்கள் என்றுகூடச் சொல்லலாம்—அமெரிக்காவைத் தங்கள் புகலிடமாகக் கொண்டனர்; இவர்களே அமெரிக்காவின் சுபிட்ச நிலைக்கு அடிப்படைக் காரணமாக உள்ளனர்" என்று குறிப்பிட்டார். உலகில் வேறெங்கும் காணாத புதுமை நிலையொன்றை அமெரிக்காவில் தாம் கண்டதாக அவர் இன்னொரு சமயம் கூறினார்: "இந்த அமெரிக்க நாட்டில் மக்களுடைய தனி இயல்புகள் கவனிக்கப்படுவதில்லை. மனிதனா இல்லையா என்பது ஒன்றையே கருதுகின்றார்கள். மனிதன் அன்புடன் வரவேற்கப்படுகிறான். இத்தகைய நிலையை உலகின் வேறெந்தப் பகுதியிலும் நான் காணவில்லை."

அமெரிக்காவின் இன்றைய வளர்ச்சிக்கும் அடிப்படையாயுள்ள குறிக்கோள் ஒன்றினை அவர் அன்றே தெளிவாகக் கூறியுள்ளார்: "என் கருத்துப்படி அமெரிக்க நாகரிகம் மிகவும் உயர்ந்ததாகும். அமெரிக்கரின் மனம் புதிய கருத்துக்களை விரும்பி ஏற்கிறது; புதுமை என்பதால் எதையும் புறக்கணிப்பதில்லை. எந்த ஒன்றையும் அவர்கள் தகுதி நோக்கித்தான் போற்றுகின்றார்கள்; தகுதியானவை நிற்கும்; தகுதியற்றவை வீழும்."

தம்மை வரவேற்ற கல்கத்தா மக்களுக்கு அமெரிக்காவிலிருந்து 1894-ம் ஆண்டு நவம்பர் மாதம் பதினெட்டாம் தேதியன்று அவர் எழுதிய பதிலில், கூறுவதாவது: "கொடுத்துப் பெறு என்பது தான் நியதி. எனவே, இந்தியா மீண்டும் மேலோங்க வேண்டுமானால் தன்னுடைய கருத்துக் கருவூலத்தை உலக நாடுகளிடையே பரப்பி, மற்றவர்கள் தனக்குக் கொடுக்கக்கூடியதை ஏற்கவும் தயாராக இருக்க வேண்டும்."

சுவாமிஜியின் கருத்துப்படி, அமெரிக்காவிடமிருந்து இந்தியா ஏற்கக்கூடியவை யாவை? அமெரிக்காவில் விவேகானந்தரைப் பெரிதும் கவர்ந்தவை பல. முதலாவதாக, அமெரிக்கா தன் பொது மக்கள் நல்வாழ்வில் காட்டும் அக்கறையை அவர் எண்ணினார்; இந்தியாவில் பொதுமக்கள் வாழும் நிலைக்கும் மேலை நாடுகளில் பொதுமக்கள் இருக்கும் வாழ்க்கை நிலைக்கும் உள்ள வேற்றுமை உடனே அவர் மனக் கண்முன் தோன்றியது. உலக சமயப் பேரவையில் பேசுவதைக் காட்டிலும் அமெரிக்க மக்களின் உதவிகொண்டு இந்திய மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதே தமது முக்கிய கவலை என்று அவரே கூறியுள்ளார். இரண்டாவதாக,

அமெரிக்க சமூகத்தில் பெண்களுக்கு இருக்கும் நிலையும், அவர்களுக்குப் பிறர் காட்டும் மரியாதையும், அவர்கள் உரிமையோடு பல காரியங்களிலும் கலந்துகொள்ளும் தன்மையும் அவரைக் கவர்ந்தன. மூன்றாவதாக, மக்களை ஒன்று திரட்ட அமெரிக்காவில் கையாளப்படும் முறை அவர் மனத்தைக் கவர்ந்தது. அதனால்தான் இந்திய மக்களைச் சங்கங்கள் நிறுவித் தம்முடைய வாழ்க்கையை ஓர் உன்னதமான வேலையில் ஈடுபடச் செய்யும்படி அவர் அறிவுரை கூறினார்; இல்லாவிடில் இந்தியா முன்னுக்கு வருவது முடியாது என்றார். கடைசியாக, அமெரிக்காவில் உள்ள பொருளாதாரச் செழிப்பு அவர் மனத்தைக் கவர்ந்தது. இந்தியாவும் அம்மாதிரி தன்னுடைய நாகரிகத்துக்கு வலுவான பொருளாதார அடிப்படை அமைக்காவிட்டால் முன்னேற முடியாது என்றார். எனினும், இந்தியாவில் எல்லாத் தேசிய வேலைகளையும் சமயத்தோடு சேர்ந்து அமைக்க வேண்டும் என்றார்; இந்தியாவின் வாழ்க்கையில் சமயமே அடிப்படை என்றார் விவேகானந்தர்.

அதனால்தான் நமது நாட்டின் அடிப்படையான ஆன்மீகத்தைப் பரப்பி அமெரிக்க நாகரிகத்திலுள்ள நற்பண்புகளை அடைய வேண்டும் என்ற ஒரே எண்ணமுடையவராய் விவேகானந்தர் திகழ்ந்தார். அமெரிக்காவின் அனுதாபமும் உதவியும் தன் நாட்டுக்கு என்றும் இருக்கும் என்பதில் அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் கண்ணை மூடிக்கொண்டு அமெரிக்கரின் வாழ்வின் எல்லா இயல்புகளையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. மேலை நாடுகளின் சமுதாயத்தில் தாம் கண்ட குறைகளை அவர் தெள்ளத் தெளிவாகக் கூறியபோதும், எப்போதும் பண்போடுதான் சுட்டிக் காட்டினார். ஒரு சமுதாய அமைப்பின் குறைபாடுகள் எங்கெங்கு கண்ணில் பட்டாலும்,

அமெரிக்காவில் 1895-ல் 'தவுஸன்ட் ஐலண்ட் பார்க்' என்னுமிடத்தில் விவேகானந்தர் சிறிது காலம் தங்கி, உபதேசம் செய்த இல்லம்.



அவர் கண்டித்தார். ஆனாலும், எவ்வாறு மதிப்பிடவேண்டும் என்று அவர் திறம்படச் சொல்லத் தவறியதில்லை.

ஒரு நாட்டை மதிப்பிடுவது பற்றி விவேகானந்தர் புரூக்ளின் நகரில் தம்முடைய சொற்பொழிவு ஒன்றில் குறிப்பிட்டபோது, "ஒரு நாட்டின் சிறப்பினை அந்நாட்டின் சேரிகளைக் கொண்டு மட்டும் மதிப்பிடக்கூடாது. உலக முழுவதும் ஒவ்வொரு ஆப்பிள் மரத்தின் கீழும் விழுந்து கிடக்கும் புழு அரித்த பழங்களை எல்லாம் ஒருவன் சேர்த்து வைத்துக்கொண்டு, அவை ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு நூல் எழுதலாம்; ஆனாலும், ஆப்பிள் மரத்தின் அழகையும் நன்மைகளையும் பற்றி அவன் ஒன்றுமே அறியாதவனாகப் போகலாம். ஒரு நாட்டின் உயர்ந்தவர்களையும் சிறந்தவர்களையும் கொண்டே அந்நாட்டை மதிப்பிடவேண்டும். உயர்நிலை தவறியவர்கள் ஒரு ஜாதியாகவே மாறி விடுகிறார்கள். எனவேதான், ஒரு பழக்க வழக்கத்தை அதனுடைய இலட்சியத்தைக் கொண்டு மதிப்பிட வேண்டும் என்பது சரியானது மட்டுமல்ல, அதுவே நியாயமும் நேர்மையுமாகும்."

அமெரிக்கப் பெண்களின் விடுதலை நிலை அமெரிக்காவில் விவேகானந்தரின் உள்ளத்தைக் கவர்ந்த ஒன்றாகும். அவர்களைப் பாராட்டியும் வாழ்த்தியும் அவர் எழுதியுள்ள எழுத்துக்கள் அவருடைய எழுத்துத் திறனுக்கு சான்றாகவும் விளங்குகின்றன. தம்முடைய சீடர்களுக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தில் அமைந்துள்ள சில பகுதிகள் இதனை வலியுறுத்தும்:

"அமெரிக்கப் பெண்கள்; நான் நூறு பிறவிகள் எடுத்தாலும் உங்களைப் போற்றிப் புகழ்ந்து என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க முடியாது. உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளத் தகுந்த சொல் இல்லை. கீழை நாட்டின் நன்றியுணர்வைக் கீழை நாட்டின் உயர்வு நவிற்சி ஒன்றுதான் தெரிவிக்க முடியும். இந்தியப் பெருங்கடல் மைக்கூடாகவும், இமாலய மலை எழுதுகோலாகவும், நிலப்பரப்பு தாளாகவும், காலம் என்பது எழுதுவோனாகவும் அமைந்தால் கூட, உங்களுக்கு என்னுடைய நன்றியைப் புலப்படுத்த இயலாது."

எனினும் அமெரிக்காவில் பெண்கள் எல்லாரும் இறக்கைகளற்ற தேவதைகளாக விளங்கவில்லை என்பதையும் அவர் கண்டார். நல்லதும் கெட்டதும் எங்கும் கலந்து இருந்ததை நாடெங்கும் அவர் கண்டார். "குறைபாடுற்றவர்களைக் கொண்டு ஒரு நாட்டை மதிப்பிடுவது கூடாது; ஏனெனில் அவர்கள் பின்தங்கி நிற்கும் களைகளேயன்றி வேறல்ல. நாட்டின் வாழ்வு வளமாகப் பெருக்கெடுத்து ஓடுவதைக் காட்டுபவர்கள் நல்ல, உயரிய, தூயவர்களே; இவர்களைக் கொண்டு தான் ஒரு நாட்டை மதிப்பிடவேண்டும்" என்றார் அவர்.

அமெரிக்கப் பெண்களின் பரந்த மனப்பான்மையைக் கண்டு விவேகானந்தர் பாராட்டினார். அவர் எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு அவர் அதைக் குறிப்பிடுகின்றார்: "அமெரிக்கப் பெண்கள் எங்கெங்கு நன்மை கண்டாலும் நன்மை ஒவ்வொன்றயும் பரந்த மனத்தோடு ஆர்வமாய் வரவேற்கின்றனர்; தங்கள் மதத்துக்கு அதனால் அவர்கள் சிறிதும் பழுது செய்வதில்லை...... ஒவ்வொன்றின் ஆக்கமும் நன்மையுமே சேர்ந்து நிலைக்கும்; ஆக்கமும் நன்மையுமே ஆன்மாவை ஆன்மாவோடு பிணைக்கும் இயற்கைச் சக்திகள்; இவை பெருகுவதே உலகில் உள்ள தீய அழிவுச் சக்திகளை அழிப்பதாகும்."

அமெரிக்க நாட்டை விவேகானந்தர் கண்டதன் பலாபலன்களைத் தொகுத்துரைப்பது இயலாது; ஏனெனில் அவர் அங்கு சென்று வந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகிய இன்றும், இன்னும் அவை வளர்ந்துகொண்டே யிருக்கின்றன. இந்தியா, அமெரிக்கா இரு நாடுகளுக்கிடையேயும் உள்ள கொள்வன, கொடுப்பன இன்று அவரது நூறாவது பிறந்த தின ஆண்டில் வரலாறு கண்டிராத மிகுந்த உச்ச நிலையில் இருக்கின்றன; இத்தகைய கொள்வன கொடுப்பன நடப்பதற்குத்தான் அவர் சொந்த முறையில் மிகுந்த ஊக்கம் அளித்தார். அமெரிக்காவை விவேகானந்தர் மிகுந்த மரியாதையுடன் நோக்கினார்; அமெரிக்காவும் அவரை மிகுந்த மரியாதையுடன் நோக்கிற்று. அமெரிக்காவுக்கு அவர் தமது வாழ்க்கைத் தத்துவத்தின் மிகச் சிறந்த பலனையே வழங்கினார்; அமெரிக்காவும் அவருக்குத் தனது வாழ்க்கைத் தத்துவத்தின் மிகச் சிறந்த பலனையே வழங்கியது. விவேகானந்தருக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்ட சந்திப்பு கிழக்குக்கும் மேற்குக்கும் ஏற்பட்ட சந்திப்பாகும். இச் சந்திப்பினால் விளைந்த சிறந்த நன்மைகளை அவரும் உணர்ந்து பாராட்டினார், அமெரிக்காவும் உணர்ந்து பாராட்டியது. அமெரிக்காவுக்கு விவேகானந்தர் சென்று வந்ததன் நன்மைகள் இன்றும் இரண்டு நாடுகளிலும் தெளிவாக விளங்கு

கின்றன; இன்னும் நெருங்கிய உறவுகள் வளர அவை முக்கியமான ஓர் அடிப்படையாய் நிற்கின்றன என்பதற்கு ஐயம் இல்லை. சுவாமிகள் நட்புள்ளத்தோடு அமெரிக்காவை மதிப்பிட்டார். இத்தகைய பெருந்தன்மை படைத்த அவரைத் தமது விருந்தினராகப் பெற்றமைக்காக அமெரிக்கரும் பெருமை கொண்டனர்.



விவேகானந்தருக்கு அமெரிக்காவின் புகழ்மாலை

அமெரிக்காவில் விவேகானந்தர் எங்கெங்கு பேசினாலும், அமெரிக்க மக்கள் இந்தியாவைப் பற்றி மிகுதியாக அறியவேண்டும் என்னும் ஆவல் கொண்டனர். செய்தி நிருபர்கள் எப்போதும் அவரைப் பேட்டிகாண முற்பட்டனர். டெட்ராய்ட் நகரில் அவர் செய்த சொற்பொழிவுகளில் ஒன்றைப்பற்றி அவர் காலத்தவர் ஒருவர் பின்வருமாறு எழுதினார்: "அனைவரும் கடைசிவரை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் பேசிய போதெல்லாம் மக்கள் மகிழ்ச்சியோடு கேட்டு 'இதற்கு முன் இப்படிப் பேசியவரை நான் கண்டதேயில்லை' என்று கூறினர். மக்களை அவர் தம் எதிரிகளாக்குவதில்லை; மேலான ஓர் உயர்நிலைக்கு உயர்த்துகிறார்—மனிதன் செய்துகொண்ட மதப் பிரிவுகளுக்கு மேலான ஒன்றை அவர்கள் காண்கிறார்கள். தமது மத நம்பிக்கைகளில் அவரும் ஒன்றாக இயைந்திருப்பதாக உணர்கிறார்கள்."

இந்திய சித்தாந்தம், வாழ்க்கை முறை ஆகியவற்றை அமெரிக்கர் படிப்பதற்கு சுவாமி விவேகானந்தர் தம்முடைய சொல்லாலும் செயலாலும் ஊக்கமூட்டினார். ஆற்றல் மிகுந்த காந்த முனை தன்னைச் சார்ந்தவற்றையெல்லாம் ஈர்ப்பதுபோல், விவேகானந்தர் தம்முடைய பணியினுக்கு ஆதரவாகவும் அப்பணி பரவுவதற்காகவும் தம்முடைய ஆக்கமான செல்வாக்குத் துறையில் மற்றவர்களை ஈர்த்தார். அமெரிக்காவில் சுவாமிகளின் முயற்சிக்கு மிகுந்த பாராட்டுதல் உடனே கிடைத்தது. அதன்பின் அவரைப் பின்பற்றி முழு மனத்துடன் பணியில் ஈடுபட்டவர்களின் செயல்களோ, சுவாமிகளுக்கு நிலைத்த புகழ்மாலைகளாக விளங்குகின்றன.

சிக்காகோவில் நடைபெற்ற உலக சமயப் பேரவையில் விவேகானந்தர் செய்த சமய விரிவுரை, ‘‘தவுஸண்ட் ஐலண்டு பார்க்கில்’’ அவரால் ஆற்றப்பட்ட சமயச் சொற்பொழிவுகள், இவற்றால் விளைந்த முக்கிய பலன் என்னவென்றால், அமெரிக்க மண்ணில் அவருடைய சிந்தாந்தத்தைப் பேணிக் காக்கவேண்டும் என்ற ஆர்வமுடைய மக்கள் வரவரப் பெருகுவதற்கு உண்டான ஊக்கமேயாகும். இம் மக்கள், வாழ்க்கையின் பலவேறு துறைகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஒரு சங்கமாகச் சேரவேண்டுமென ஆவல் கொண்டனர்; அதன்படி சுவாமிகளிடம் தங்கள் எண்ணத்தை வெளியிட்டனர்; *1894*-ல் நியூயார்க் வேதாந்த சங்கத்தை அவர் நிறுவினார்; அதுதான் அமெரிக்காவில் ஏற்பட்ட முதல் வேதாந்த சங்கம்.

அதன்பின், விவேகானந்தர் தாயகத்துக்குத் திரும்புகையில், ஐரோப்பாவுக்குச் சென்றார். கொஞ்சமும் அறிமுகமில்லாத அமெரிக்காவில் அவர் அளவுகடந்த செல்வாக்கும் புகழும் கொண்ட செய்தியெல்லாம் அவர் வருமுன்பே இந்தியப் பத்திரிகைகளை எட்டியிருந்தன. *1962*-ம் ஆண்டு விவேகானந்தர் நூற்றாண்டு விழாவையொட்டிய வெளியீடு ஒன்றில் புகழ்பெற்ற ஆசிரியரான கிறிஸ்டஃபர் இஷர்வுட் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :-

‘‘*1897*-ம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இடையில் விவேகானந்தர் இலங்கை வந்து சேர்ந்தார். அங்கிருந்து கல்கத்தா வரைக்கும் அவருடைய பயணம் அனைத்தும் வெற்றி விழாவாகத்தான் காட்சியளித்தது. அமெரிக்காவில் அவர் செய்த சொற்பொழிவுகளைப் பற்றிய விவரங்களையெல்லாம் அவர் நாட்டினர் செய்தித் தாள்களின் வாயிலாக அறிந்திருந்தனர். விவேகானந்தருடைய வெற்றி சில சமயம் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் தம்முடைய

பேலூர் மடத்தில் உள்ள ராமகிருஷ்ணர்

1893-ல் விவேகானந்தர் தோற்றம். அமெரிக்காவில் முதலில் எடுக்கப் பட்டதாகக் கருதப்படும் ஒரு புகைப் படத்தை அடிப்படையாகக்கொண்டு வரைந்த ஓவியம்.

பணிக்காகத் திரட்டியிருந்த சொற்பத் தொகையையும் அவர் சேர்த்திருந்த சீடர்களின் எண்ணிக்கையையும்விட எவ்வளவோ பெரியது, மேலை நாடுகளுக்கு அவர் சென்றுவந்த வெற்றி என்று அவர்கள் கருதியது சரியே. தாசனை நேசனைகவோ, வைராக்கியனை எதிரியாகவோ அன்றி, கற்றுக்கொள்ளவும் கற்றுக்கொடுக்கவும், உதவி கேட்கவும் உதவி புரியவும் மனம் ஒப்பிய உண்மையான நண்பன் என்ற நிலையில் விவேகானந்தரை அமெரிக்கரும் ஆங்கிலேயரும் ஏற்றுக் கொண்டனர்; அவருக்கு முன்னால் எந்த இந்தியனும் தன்னை இவ்வாறு அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்ததில்லை என்று துணிந்து கூறலாம். கிழக்குலகு, மேற்குலகு இரண்டின் நன்மைகளைப் போற்றியும் குறைபாடுகளைக் கண்டித்தும் இரண்டு உலகுகளுக்கும் நடுநிலைமையாக நின்ற அவரைப்போல் வேறு யார் அவ்வாறு நின்றார்? வேத காலப் புராதன இந்தியாவோடு பத்தொன்பதாம் நூற்றாண்டு இளம் இந்தியா இயைந்து நிற்பதை அவர் தம் வாழ்க்கையில் காட்டியதுபோல் வேறு யார் காட்டமுடியும்? இந்தியாவுக்கு நேர்ந்த வறுமையையும் அடக்கு முறையையும் எதிர்த்துப் போராடிக்கொண்டே அமெரிக்க இலட்சிய மனப்பான்மையையும் கருமமே கண்ணான பிரிட்டிஷ்காரரின் உறுதியான நோக்கையும் உளமாரப் பாராட்டவும் அவரைப் போல் வேறு யாரால் முடியும்?''

நியூயார்க்கில் தொடங்கிய வேதாந்த இயக்கம் படிப்படியாக அமெரிக்காவின் ஒரு கரையி லிருந்து மறுகரைக்குப் பரவலாயிற்று. இன்று அமெரிக்காவில் பல இடங்களிலுமாக கிட்டத் தட்டப் பன்னிரண்டு வேதாந்த சங்கங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தகுந்தது,

ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர் ப
ஃபிராங்க் வோரக் வரைந்த ஓ

ஹாலிவுட்டில் உள்ள தென் கலிஃபோர்னிய வேதாந்த சங்கமாகும்; மற்றவற்றைவிட இது அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது; அதிகப் பணிகள் புரிவது. இச்சங்கங்கள் யாவும் அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் செய்த தொண்டுகளுக்கு நினைவுச் சின்னங்களாகும்.

இந்த வேதாந்த சங்கங்கள் பொதுமக்களுக்காகச் சொற்பொழிவுகளையும் மாலையில் விவாத அரங்குகளையும் நடத்துகின்றன. சங்கத்தின் உறுப்பினர்களுக்காகத் தனி வகுப்புகள் நடத்தப் படுகின்றன. சொற்பொழிவுகள் யாவும் பெரும்பாலும் இந்து சமய நூல்கள், பண்பாடு பற்றியே இருக்கும். இந்து சமயம் பற்றியும் தத்துவம் குறித்தும் தெளிவாகப் புரிந்துகொள்ள அவை உதவுகின்றன. இத்தகைய சமயப் பிரசாரங்களால் பிற மதத்தினரைத் தம் மதத்தாராக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் இருந்ததில்லை. இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பு பற்றி ஆழ்ந்த உணர்வு ஏற்படவேண்டும் என்பதே நோக்கம்.

1963-ல் அமெரிக்காவில் உள்ள வேதாந்த சங்கங்கள் தங்களுடைய ஸ்தாபகரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான நிகழ்ச்சிகளை உற்சாகத்துடன் தயாரித்தன. நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் பல பகுதிகளிலிருந்தும் சமயத் தலைவர்களும், தத்துவ மேதைகளும் வந்தனர். அவ்விழாவின் நினைவாகப் பல புதிய நூல்கள் வெளியிடப்பட்டன; விவேகானந்தரது எழுத்தும் கருத்தும் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றன.

நியூயார்க்கில் உள்ள ராமகிருஷ்ண - விவேகானந்தா சங்கத்தினரால் மார்ச் மாதத்தில் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் அமெரிக்கரும் இந்தியருமாக இருநூற்று அறுபத்தேழுபேர் கூடினர். அப்போது அந்நிகழ்ச்சியில் ஐ. நா. சபையின் பொதுச் செயலாளரான ஊ தாண், "நம் காலத்தில் மிகச் சிறந்தவராக விளங்கிய ஒரு மேதைக்கு நாம், நம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார். வின்சென்ட் ஷீன் என்ற பிரபல அமெரிக்க நூலாசிரியர், "அமெரிக்கரிடையே விவேகானந்தருக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கு வியப்பூட்டுவது" என்றார்.

அதே மாதத்தில் போர்ட்லண்ட் வேதாந்த சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமெரிக்கத் தத்துவ மேதை வில்லியம் ஜேம்ஸுக்கு ஒப்பானவர், விவேகானந்தர் என்ற பாராட்டுரையை ஓர் அமெரிக்க அறிஞர் வழங்கினர். போர்ட்லண்ட் ஸ்டேட் கல்லூரியின் பேராசிரியரான ஜேம்ஸ் செலிக் என்பவர், "ரால்ஃப் வால்டோ எமர்சன், ஹென்றி டேவிட் தோரோ, கவிஞர் வால்ட் விட்மன் ஆகியோருடைய முயற்சிகளினால் அமெரிக்கச் சிந்தனையாளரிடையே ஓரளவு பரவியிருந்த ஒரு தத்துவத்தை விவேகானந்தர் விளக்கியமையால்தான் அவர் அமெரிக்க மக்களிடையே பெருத்த செல்வாக்குப் பெற முடிந்தது" என்றார். "தம்முடைய கருத்துக்களை விவேகானந்தர் எடுத்துச் சொல்லிய விதம், நமக்கு நம்முடைய பேராசிரியர் ஜேம்ஸை நினைவுபடுத்தியது" என்று அவர் மேலும் கூறினர்.

ஒரு தத்துவத்தை வாழ்க்கையில் எடுத்துக் காட்டக்கூடிய ஒருவர் இல்லாவிட்டால், அத் தத்துவம் பயனற்றது என்றும், உருப்படியான பயன்களைக்கொண்டே ஒரு தத்துவத்தின் தகுதியை அமெரிக்கர் மதிப்பிடுவர் என்றும் பேராசிரியர் செலிக் கூறினர். நடமாடும் புனிதர் ஒருவரை காணும் வாய்ப்பு அமெரிக்கருக்கு முதன் முதலாக சுவாமி விவேகானந்தரிடத்தில்தான் கிடைத்தது, என்று சொல்லலாம் என்றார் அவர். குழந்தைகளோடு இருக்கும்போது விவேகானந்தர் குழந்தையாகவே மாறி விடுகின்றார்; அறிவுரையாளர்களிடையே இருக்கும்போது அவர்களுக்கு அறிவுரை கூறும் ஆசானாகி விடுகின்றார்; அசட்டையாயிருந்தவர்களை விழிப்படையச் செய்யும் மாண்புடைய இந்துவாக விளங்கினர்; மத நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களுக்கும் ஆன்மீக உள்ளுணர்வுடையவர்களுக்கும் மாபெரும் ஆன்மீக உண்மைகளுக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர் என்று பேராசிரியர் செலிக் கூறினர்.

நியூயார்க்கில் ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் இருநூற்றைம்பது பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். அந் நிகழ்ச்சியில் இந்தியாவின் ஐ. நா. தூதுவரும், நியூயார்க்கின் இந்திய - கான்ஸல் ஜெனரலும் பங்கு கொண்டனர். கொலம்பியா பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியரான எய்ன்ஸ்லி எம்ப்ரீ என்பவர் அக் கூட்டத்தில் பேசிய போது, "இந்தியாவின் சிறப்பையும் இந்தியா உலகுக்கு அளிக்கக்கூடிய செல்வம் ஒன்று உண்டு என்பதையும் விவேகானந்தர் மிகத் தெளிவாக வலியுறுத்தினர். தனி மனிதருடைய வலிமையும், உறுதியும் ஆற்றலுமே வேண்டும் என்று அவர் வலியுறுத்தினர். இந்தியாவில் இன்று காணும் புதிய போக்குக்கும் அவரே காரணம் என்று நாம் கூறலாம்."

கல்கத்தா தக்ஷிணேஸ்வரர் கோவில்

1963 ஏப்ரல் மாதம் நியூயார்க் நகரின் கம்யூனிட்டி சர்ச்சில் நடந்த ஒரு நூற்றாண்டு விழா நிகழ்ச்சியும் முக்கியமானதாகும். அங்கு பல நூறு பேர் கூடியிருந்த கட்டிடத்தில் மாஸச்சூஸட்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னலஜி தத்துவப் பேராசிரியரான டாக்டர் ஹூஸ்டன் ஸ்மித் கூறியதாவது: "கிழக்கிலும் மேற்கிலும் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் உறங்கிக் கிடந்த சமய உணர்வுகளைத் தட்டி எழுப்பியவர் சுவாமி விவேகானந்தர். மனித குலத்தின் ஆன்மீக வாழ்வோடும் லௌகீக வாழ்வோடும் முற்றும் இயைந்த மனிதர் அவர். நம்மிடத்தில் உள்ள சிறந்த நல்லியல்புகள் சிலவற்றை நாம் அவரிடம் காண்கின்றோம் என்று கருதுகிறேன்." அதே கூட்டத்தில், கம்யூனிட்டி சர்ச்சின் மதகுரு பூஜ்யர் டொனல்ட் ஹாரிங்டன் பேசுகையில்: 'உலகப் பொதுச் சமயம்' பற்றி விவேகானந்தர் கூறியதே வரும் பொருள் உரைப்பதில் அவர்க்குள்ள திறமையை விளக்குவதாகும் என்றார். "அவர் ஓர் உண்மையான தீர்க்கதரிசி. உலக ஒருமைக்காக அவராற்றிய சொற்பொழிவுகளின் பயனை உலகம் உணர்ந்து போற்றக்கூடிய காலம் வரத்தான் போகின்றது. பிணக்கு பற்றி அல்ல, இன்றைய உலகிற்குத் தேவையான அமைதி, இணக்கம் பற்றி அவர் பேசினர். அதனுல்தான் நூற்றாண்டு விழாக் கொண்டாடி அவர் கூறியவற்றை நினைக்கின்றோம்" என்றார் ஹார்லிங்டன்.

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவின்போது, நியூயார்க் ராமகிருஷ்ண-விவேகானந்த நிலையம் அளித்த விருந்தில் பேச வந்திருந்த பெரியார்கள். இடமிருந்து வலம்: நியூயார்க் வேதாந்த சங்கத்தைச் சேர்ந்த சுவாமி பவித்ரானந்தர், ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஊ தாண், ராமகிருஷ்ண-விவேகானந்த நிலையத்தைச் சேர்ந்த சுவாமி நிகிலானந்தர் நிலையத்தின் தலைவர் செஸ்ட்டர் எஃப். கார்ல்ஸன்.

நியூயார்க்கில் மே மாதத்தில் கிழக்கு-மேற்கு நாடுகளின் நல்லுணர்வுக்கான நடவடிக்கைகளை நடத்தி வைக்கும் ஆசியா ஹவுஸ் என்ற இடத்தில் விவேகானந்தர் விழா ஒன்று நடந்தது. அந்த அவையினருள் சுவாமி ஆத்ம ஞானனந்தர் என்பவரும் ஒருவர். 'சுவாமி' என்னும் சிறப்புடன் வழங்கப்படும் மிகச் சில அமெரிக்கருள் அவரும் ஒருவர். பல்லாண்டுகளாக பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் கீழ்த்திசை ஒப்பியல் சமய, மொழியாராய்ச்சித் துறையின் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் அமிய சக்கரவர்த்தி பேசுகையில், "விவேகானந்தர் மேலை நாடுகளிலிருந்தபோதும் தம்முடைய நாட்டில் இருப்பது போன்ற உணர்வையே கொண்டிருந்தார். தம்முடைய நாட்டு மக்களின் நெஞ்சங்களில் இடம் பெற்றுள்ளது போலவே, அமெரிக்க நாட்டு மக்களின் உள்ளங் களிலும் சமய உணர்ச்சி இடம் பெற்றிருப்பதைக் கண்டார். பலாத்கார ஆற்றல் என்ற கொள்கை சுவாமி விவேகானந்தரை ஆட்கொள்ளவில்லை. பலாத்காரம் என்பது கிழக்கத்திய முறையும் அல்ல, மேற்கத்திய முறையும் அல்ல, உலக முழுவதும் நிலக்கூறு, பண்பாடு, மக்கள் என்ற ஏதாவது தொரு காரணத்தால் ஏற்பட்டு வருவதேயாகும்" என்றார். டாக்டர் எம்ப்ரீ என்பார், பதினேழு பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் மேலைநாட்டு எழுத்தாளர்கள் இந்தியா பற்றி எழுதிய செய்திகளை நினைவுறுத்தினர். அவற்றில் உள்ள பல முரண்பாடுகளை விவேகானந்தர் ஒருமைப்படுத்திக் காட்ட முயன்றார் என்றும், அதனல் அவர் இந்தியாவின் சிறப்பைப் பன்மடங்கு உயர்த்திவிட்டார்" என்றும் கூறினர். "இந்தியாவின் சமூக, அரசியல் நிலைமை பற்றி அவர் உண்மையான ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். பிளவுபட்ட இந்தியாவின் அறைகூவலை அவர் ஏற்று, சமய, ஆன்மீகக் கருத்துக்களில் ஒற்றுமை அவசியம் என்று வலியுறுத்தினர். மதமே ஒற்றுமைப்படுத்தும் சக்தியாயிற்று" என்றார் டாக்டர் எம்ப்ரீ.

வாஷிங்டனில் உள்ள ஸ்மித்ஸோனியன் நிலையத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் நடை பெற்ற நூற்றுண்டு விழா நிகழ்ச்சியில் பேசிய புகழ்பெற்ற பிரமுகர்கள், சகிப்புத்தன்மை வேண்டும் என்று விவேகானந்தர் உலகுக்கு அளித்த செய்தி தொடர்ந்து நிலைத்து வருவதை வலியுறுத்தி னர்கள். சகிப்புத்தன்மை சமயத் துறையில் மட்டுமல்லாமல் நாடுகளிடையே நடக்கும் காரியங் களிலும் தேவையாகும் என்று கொலம்பியா பல்கலைக்கழகத் தலைவரான டாக்டர் கிரேசன் கர்க் என்பவர் வற்புறுத்தினர்.

டாக்டர் கர்க் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "பல மத நம்பிக்கைகளை முன்னிட்டு உலகில் பிணக்குகளும் இரத்தக் களரியும் ஏற்பட்டதுண்டு; ஆனல் அம் மதங்கள் யாவும் அமைதி யாக வாழ்வதற்குப் போதிய இடம் உலகில் உண்டு; இதை உலகம் கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்டது போலவே, வெவ்வேறு பொருளாதார அமைப்புகளும், அரசியல் அமைப்புகளும் உள்ள மக்கள் ஒன்றாய் வாழ்வதற்கேற்றவாறு போதிய இடம் இச் சிறிய உலகிலும் உண்டு என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்."

"நலம் தரும் பெரியார் ஒருவரது செல்வாக்கு காலப்போக்கில் கரையாது நின்று மக்கள் குலத்துக்கு மேலும் விரிவான பலன் விளைவிக்க முடியும்" என்று கூறிய டாக்டர் கர்க், இந்திய-அமெரிக்க உறவுகளில் விவேகானந்தரின் வாழ்க்கைக்கும் போதனைக்கும் என்ன பொருளும் சிறப்பும் உண்டு என்பதைப்பற்றி எடுத்துரைக்கலானர். இவ்வகையில் சுவாமி விவேகானந்தர். செய்த பணி, இரு நாடுகளின் பண்பாடுகளையும் விளக்கியுரைத்ததே யாகும் என்றார் டாக்டர் கர்க் "தம்முடைய கவர்ச்சியான தோற்றத்தினலும், கூர்த்த மதியினலும், ஆழ்ந்த ஆன்மீகத்தினலும் அவர் அமெரிக்க மக்களைப் பெரிதும் கவர்ந்தார்; அவர் தம்முடைய மக்களையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் பற்றி அமெரிக்கர் கொண்டிருந்த விசித்திரமான கருத்துக்களைத் தவறென்று காட்டித் திருத்த முயன்றபோதும் அவர்கள் அவர் பேச்சை மரியாதையுடன் கேட்கக் காரணம் அதுவே" என்று டாக்டர் கர்க் கூறினர். அதேபோல், இந்திய மக்கள் அமெரிக்கா பற்றிக்கொண்டிருந்த தவறான எண்ணத்தையும் விவேகானந்தர் திருத்தி உதவினர். இங்ஙனம் தமது அறிவுக் கூர்மையாலும் அன்பினலும் இரு நாடுகளிடையும் நல்லுறவை வளர்க்க அயராது பாடுபட்ட இப் பெருமகனுக்கு இந்தியாவும் அமெரிக்காவும் கடமைப்பட்டுள்ளன என்றார் டாக்டர் கர்க்.

நட்புறவும் ஒன்றையொன்று மதித்து நடக்கும் தன்மையும் உள்ளவையாய் நாடுகள் அமைதியாய் வாழும் உலகமே வேண்டும் என்பது அனைவருக்கும் பொதுவான அவா; அந்த அவாவினை எடுத்துரைத்த டாக்டர் கர்க், "நமக்கு வழிகாட்டி உதவிய விவேகானந்தர் போன்ற

வர்களால்'' அத்தகைய அமைதி உலகம் தோன்றும் நாள் மேலும் நெருங்கி வந்துள்ளது என்று கூறித் தமது புகழுரையை முடித்தார்.

விவேகானந்தரின் பிறப்பு நூற்றாண்டு விழா கொண்டாடும் ஆண்டில், அமெரிக்காவுக்கு இந்தியாவிடத்தில் இருக்கும் அக்கறை முன்பு எப்பொழுதும் இருந்ததைவிடப் பலவாறாகக் கிளைத்துப் பெருகியிருக்கிறது. இந்திய விவகாரங்களைப்பற்றி ஆராயும் அமெரிக்க நிலையங்களின் எண்ணிக்கை இடையறாது பெருகி வருகின்றது. பெருகி வரும் இந்திய அமெரிக்க உறவுகளின் வரலாற்றோடு, விவேகானந்தரின் மரபு ஒன்றாய்ப் பிணைந்துவிட்ட ஒன்றாகும். அமெரிக்காவில் அவர் ஆற்றிய பணியை இன்று ஆராய்வோர் அவரை ஒரு மாபெரும் ஆன்மீகத் தலைவர் என்று மட்டுமல்ல, ஒரு அரசியல், சமூகச் சிந்தனையாளர் என்றும் மதிக்கின்றனர். இந்த இந்தியப் பெருமகனின் பல திறப்பட்ட மேதையை நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர் புகழ்கின்றனர்.

1963-ல் வாஷிங்டனில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசிய கீழ்த்திசையியல் அமெரிக்க அறிஞர் டேல் ரீப், அமெரிக்காவில் இந்தியச் சிந்தனை ஆராய்ச்சிக்கு உலக சமயப் பேரவை பெரிதும் ஊக்கமளித்தது என்றார். அதே ஆண்டு போர்ட்லண்ட் நகரில் வேதாந்த சங்கம் ஐந்து மதங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கூட்டி ஒரு கூட்டம் நடத்தியது; கடவுளோடு ஒன்றுவதுதான் ஆன்ம விடுதலையின் பயன் என்பதை அவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

சுவாமி விவேகானந்தருக்கு அமெரிக்கரால் சூட்டப்படும் புகழ்மாலைகள் சிறந்த ஒருவரின் மரபுக்காகச் சூட்டப்படும் புகழ்மாலைகளே யாகும்.

"குப்பை கூளத்தை எறிவது போல, மற்ற நாடுகளிலிருந்து விரட்டப்பட்டு, அல்லல்படும் ஏராளமான ஏழை மக்களை அமெரிக்கா வரவேற்று வாழ்வளிக்கிறது; இவர்கள்தாம் உண்மையில் அமெரிக்காவின் உயிர்நாடி."

"இந்த அமெரிக்க நாட்டில் மனிதனின் தனிப்பட்ட விவரங்களைப் பற்றி யாரும் எதுவும் கேட்பதில்லை. மனிதன், மனிதனாக இருந்தால் போதும்; இவர்கள் அவனுக்குத் தமது இதயத்திலேயே இடமளிக்கிறார்கள். இது, உலகில் நான் வேறெந்த நாட்டிலும் ஒரு போதும் காணாத ஒன்றாகும்."

"புதிய கருத்துக்களை விரும்பி ஏற்கும் தனி மனப்பண்பு ஒன்றை அமெரிக்காவில் நான் பார்க்கிறேன்; புதிது என்பதற்காக எதையும் அங்கு தள்ளி விடுவதில்லை. தராதரங்களைக் கொண்டே எதையும் சீர்தூக்கி, ஏற்கின்றனர் அல்லது தள்ளி விடுகின்றனர்."

United States Information Service
Mount Road, Madras-2

Printed at Vadapalani Press, Madras-26